மாலை: 51 மணி: 7 ஜூலை 2009 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

அருள் தரும் அன்னை

பெரியபாளையம் ஓம் ஸ்ரீ பவானி உற்சவர் அம்மன்

ஸ்மார்ட் கிரியேஷன்ஸ்

பொன் ஆலயம்

பக்தியுடன் சமர்ப்பணம் செய்த 8.02.2009 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்ற கும்பகோணம் அருள்மிகு ஸ்ரீ ஒப்பிலியப்பர் திருக்கோயில் மூலவர் தங்க விமான பத்மம் மற்றும் மஹா பத்மம்

அதிநவீனம், அற்புதம், உன்னத NTGD லண்டன் தொழில்நுட்பம்!

தொடர்புக்கு :
K.S.S. நாராயணன்
98848 77722

- சிக்கனமான முறை
- நீடித்து நிலைக்கும் பொலிவு
- தமிழக அறநிலையத்துறையின் அங்கீகாரம்
- தங்கத்தின் அளவை துல்லியமாக கணக்கிடலாம்



தங்கத்தேர், கொடிமரம், கலசங்கள், விமானம், கவசங்கள், பிரபை, மூலஸ்தான கதவுகள்

பித்தளை, தாமிரம், வெள்ளி மற்றும் பஞ்சலோகத்தில் 24கேரட் கோல்ட் கோட்டிங் சிறப்பாக செய்து தர இயலும்

SP 15, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Tel : 044 2623 0033 /4205 9911

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2040 ஆடி மாதம்
மாலை 51. மணி 7 ஜூலை 2009

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி நாச்சியார் ஆண்டாள் அவதரித்த ஆடிப்பூரம் திருநாளும், அம்பிகை கோமதி தபசு இருந்து இறைவன் சங்கரநாராயணராக அருட்காட்சி வழங்கிய "ஆடித்தபசு" திருநாளும், கிராமங்களில் ஆடிப் பச்சை பள்ளயமிட்டு கொண்டாடும் அருள்மிகு மாரியம்மன் விழாக்களும் நிறைந்த ஆடித்திங்கள் நம்மை எதிர்கொண்டழைக்கிறது. இந்த ஆடித்திங்களில் பூம்புனல் வெள்ளம் ஆறுகளில் கரைபுரண்டோடி அனைவரின் வாழ்விலும் ஆனந்தம் கண்டிட அங்கயற்கண் அம்மையையும், அம்மையப்பரையும் வேண்டுகிறேன்.

வேண்டுவோருக்கு வேண்டும் வரம் அளிக்கும் பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மனின் திருவுருவம் முன் முகப்பிலும், அருள்சுரக்கும் அன்னை இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மனின் திருவுருவம் உள்முகப்பிலும் கொண்டு இவ்விதழ் மலர்ந்துள்ளது.

"கண்டவர் விண்டிலர்", "விண்டவர் கண்டிலர்" என்ற கூற்றுக்கு மாறாக மாணிக்கவாசகர் ஆண்டவனைக் கண்ணால் கண்டு அனுபவித்து விண்டுரைத்தவர் என்பதை "மணிவாசகர் கண்டதும் விண்டதும்" எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள்.

சைவத்தின் மேன்மைதனை தொல்காப்பிய காலந்தொட்டு தமது கருத்தோவியமாக டாக்டர் திருமதி. ராதா தியாகராசன் அவர்களும், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் பெருமைகளை கவிமாமணி வேலூர் ம. நாராயணன் அவர்களும் இவ்விதழில் வழங்கியுள்ளனர்.

துன்பந்தொலைந்து இன்பம் ஓங்க வேண்டும் எனில் வினைபுரியாது, தினையளவேனும் இறைவனை மறவாது அன்புநெறி நின்று அருள் மயமாம் சிவசிந்தையுடன் இருங்கள், அவநெறி அகன்று சிவநெறியில் செல்லுங்கள் எனும் அருள்மொழியரசு கிருபானந்தவாரியார் சுவாமிகளின் "துன்பம் துடைக்கும் வழி" எனும் அறவுரைக் கட்டுரை இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

திவ்யதேசங்கள் நூற்றெட்டில் நடுநாட்டில் விளங்கும் திருவயிந்திரபுரம் திருத்தலத்தின் சிறப்புகளும், மயிலுருவில் அன்னை வணங்கிய திருமயிலாடி திருத்தலத்தின் சிறப்புகளும், எறிபத்தர் – சிவகாமியாண்டார், புகழ்ச்சோழர், கருவூரார் ஆகியோருக்கு இறைவன் அருட்காட்சி வழங்கிய ஆனிலையப்பர், அலங்கார வல்லி, சௌந்திர நாயகி, வீற்றிருந்து அருள்பாலிக்கும் கரூர் அருள்மிகு கல்யாணபசுபதீஸ்வரர் திருக்கோயிலின் சிறப்புகளும் இவ்விதழில் ஆலய உலாக்களாக வெளிவந்துள்ளன.

சிறுத்தொண்டரின் திருத்தொண்டினை விளக்கும் முனைவர் இர. தர்மாம்பாள் அவர்களின் கட்டுரையும், திரு. இராமநாதபிள்ளை அவர்களின் உலகம் உய்ய உதித்த உடையவர் தொடர் கட்டுரையும், முனைவர் திரு. ஏ. பரந்தாமன் அவர்களின் திருவரங்கனின் பெருமைகளைச் செப்பும் "மெய்யில் வாழ்க்கை" எனும் தொடரும் இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

அனைவரும் இதழினைப் படித்து இன்புறுவதுடன், தொடர்ந்து தங்களது நல் ஆதரவினை வழங்கிட அன்புடன் வேண்டுகிறேன்.

ப.ரா. சம்பத்

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்

இந்துசமய அறநிலையத்துறை
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

துறவோரவிடம்



வழித்துணையான், நடுத்தரக் குடும்பத்து, வாலிபன். அவன் தனது வாழ்க்கைத் துணையுடனே ஒரு ஓட்டுவில்லை வீட்டிலே வாழ்ந்து வந்தான். ஊருக்கு உழைப்பதில், ஊர் மக்களுக்காக ஓய்வின்றிப் பணியாற்றுவதில் அவனுக்குத் தனித்ததோர் மகிழ்ச்சி. எந்நேரமும் அவ்வூரார் பலர் அவனைச் சூழ்ந்து கொண்டு உதவிகளைப் பெற்றுவந்தனர். ஏழை எளியோர்க்குத் தொண்டாற்றுவது – இருக்க இடமின்றித் தவிப்போருக்கு குடில் அமைப்பது, குடிநீர் இன்றி அலைவோர்க்குக் குளம், கிணறு வெட்டுவது–இப்படி நண்பர்களின் துணையோடு அவன் நற்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அவனது எளிய இல்லத்திற்கு எதிரே ஏழடுக்கு மாளிகையொன்றுக்கான அடித்தளம் போடப்பட்டது. நச்சு நினைப்பினர் சிலர், அந்த மாளிகை வழித் துணையான் எழுப்புவதுதான் என்று ஊரெல்லாம் கொட்டிமுழங்கினர். முதலில் ஊரிலும் சிலர் நம்பினர். சிலர் ஐயம் கொண்டு வியப்புற்றனர். ஆனால் உண்மை சில நாட்களுக்குக்கெல்லாம் வெளிவந்து விட்டது. வழிப்பறிக்காரன் ஒருவன், சேர்த்த பணத்தையெல்லாம் செலவழித்து அந்த மாளிகையை உருவாக்கியிருக்கிறான். அந்த வழிப்பறியாளன் மிகப்பெரும் விழா கொண்டாடி, அந்த மாளிகைக்குக் குடியேறிய பிறகுதான் வழித்துணையானின் முழுத் தூய்மையும் மக்களுக்குப் புரிந்தது.

ஆயினும் ஒரு சிலர், ஏழடுக்கு மாளிகையின் பெருமைக்கு ஆசைப்பட்டு வழித்துணையானை விட்டு நீங்கி, வழிப்பறியாளன் வசம் தங்களை ஒப்படைத்துக் கொண்டனர். ஏராளமான செல்வம்–ஏழடுக்கு மாளிகை–இவற்றால் இயல்பாக ஏற்படும் செருக்குடன் ; எதிர்த்த வீட்டு வழித்துணையாளனின் நண்பர்கள் சிலரையும் விலைபேசி வாங்கிவிட்ட ஆணவம் வேறு வழிப்பறியாளனின் வன்னெஞ்சத்தில் குடிகொண்டது. எத்தனையோ வித்தகர்கள் தன் முன்னே தாசர்களாகத் தாள்பணிந்து நின்றிடத் தயாராக இருக்கும்போது எதிர் வீட்டுக்காரன் தலை மட்டும் தனக்கு வணங்க மறுக்கிறதே என்ற சினம் கொப்பளித்தது! சீற்றம் பொங்கியது! எனவே வழித்துணையானைப் பற்றி வாயில் வந்ததையெல்லாம் பேசித் தூற்றினான். ஓரிருமுறை ஊரின் ஏரிக்கரையோரம் வழித்துணையான் உலவிடச் சென்றபோது தனது ஆட்களை ஏவிவிட்டு அவனைத் தாக்கிடவும் செய்தான். வழிப்பறியாளனின் வாயில் காப்போரில் இருந்து அருகிருந்து அளவளாவிடும் நண்பர்கள் வரையில் வழித்துணையானைப் பற்றி வசைமாரி பொழிந்தவண்ணமிருந்தனர்.

அவற்றைக் குறித்து அவன் கவலைப்பட்டுக் கொள்ளவேயில்லை! அளவற்ற செல்வமிருக்கிறது – ஆள் அம்பு இருக்கிறது– அதனால் எல்லையற்ற செருக்கு கொண்டலைகிறான்! அவன் கொண்டுள்ள செருக்கே அவனைத் தண்டிக்குமென்று கூறிவிட்டு, வழித்துணையான், தனது பணிகளைத் தொடர்ந்தான். இழிமொழிகள் சுடுசொற்கள்–கடுந்தாக்குதல்கள்–பழிசுமத்து படலங்கள்– அனைத்துக்கும் பொறுமையெனும் கவசம் பூண்டு வழித்துணையான் நிமிர்ந்து

நடந்தது கண்டு ஊரார் குமுறினர்!

அவன் காட்டிய பொறுமையே அவனுக்குக் கிடைத்த படைக்கலன் ஆயிற்று! அந்தப் பொறுமைக்குக் கிடைத்த பரிசாக ஊரார் அனைவரும் வழித்துணையான் பக்கம் அணிவகுத்தனர். வழித்துணையான், அவர்களை அப்போதும் அமைதிப்படுத்தி அனுப்பிவிட்டு, ஆற்றில் கரையுடைத்தெழும் வெள்ளத்திற்கு அணைகட்ட விரைந்து சென்று விட்டான் ஆருயிர்த் தோழர்கள் சிலருடன்!

அப்போது மாளிகையின் முகப்பில் வந்து நின்று வழிப்பறியாளன் வாய் வலிக்கச் சிரித்துக் கொண்டே, "என்னாடா! எல்லோரும் எதிர்வீட்டுக்காரனுக்கு எடுபிடிகளாக வந்தீர்களா?" என்று கேட்டதுதான் தாமதம். அமைதியாகத் திரும்பிக் கொண்டிருந்தோர் அரிமாக் கூட்டமாயினர்! பாய்ந்தனர் அந்தப் பளிங்கு மாளிகையின் மீது! இடிந்து தூள்தூளானது அந்த இறுமாப்புக்காரனின் அரண்மனை!



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

அதோ தொலைதூரத்தில் தன்னந்தனியாக ஓடிக்கொண்டிருக்கிறான் ஆணவங்கொண்ட அந்த ஆர்பாட்டக்காரன்!

வழித்துணையானோ ஆற்று வெள்ளத்தைத் தடுத்துவிட்டு ஊரார் நல்வாழ்த்துக்களுடன் இல்லம் நோக்கி வந்துகொண்டிருக்கிறான்.

இறுமாப்பினால் தீமைகளை விளைவிப்போரைத் தம்முடைய பொறுமையினால் வென்றுவிடலாம் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் வழித்துணையான் வரலாறு!

அதற்கு இதோ குறள் :

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்."

அதிகாரம் : 16 பொறையுடைமை பாடல்:108

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

இதழின் உள்ளே..

மணிவாசகர் கண்டதும் விண்டதும்	–தமிழாகரர் தெ.முருகசாமி	6
வாழையடி வாழையென விளங்கிய வண்ணச் சரபம் அடிகளார்...	கவிமாமணி டாக்டர் வேலூர் ம.நாராயணன்,	10
எது சைவம்?	டாக்டர் திருமதி ராதா தியாகராசன்	13
திருவயிந்திரபுரம்	பாச்சுடர் வளவ.துரையன்	17
மயிலுருவில் அன்னை வணங்கிய திருமயிலாடி	பனையபுரம் அதியமான்	22
உலகம் உய்ய உதித்த உடையவர்	பெ.ராமநாதபிள்ளை,	25
துன்பம் துடைக்கும் வழி	திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்	28
சிறுத்தொண்டரின் திருத்தொண்டு	முனைவர்.இர.தர்மாம்பாள்,	32
திருவரங்கனும் சேரலர் கோனும்	முனைவர் ஏ.பரந்தாமன்	35
கருவூர் அருள்மிகு கல்யாண பசுபதீசுவர சுவாமி திருக்கோயில்		37

அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன்– இருக்கன்குடி

அருள்மிகு மாரியம்மன் 108 போற்றிகள்

1. ஓம் அண்ணாமலையில் அமர்ந்தாய் போற்றி
2. ஓம் அலகு அணிந்தார்க்கு அருள்வாய் போற்றி
3. ஓம் அலர்மேலு மங்கையும் ஆனாய் போற்றி
4. ஓம் அறுகோணத்து உள்ளிருக்கும் ஆதி போற்றி
5. ஓம் அனலும் தணலும் ஆவாய் போற்றி
6. ஓம் அன்னம் அளிக்கும் அன்னமே போற்றி
7. ஓம் ஆதிசிவன்தேவி அம்மையே போற்றி
8. ஓம் ஆதியில் உமையாய் ஆனாய் போற்றி
9. ஓம் ஆயிரம் கண்ணுடை அம்மா போற்றி
10. ஓம் ஆரணிப் பாளையத்து அம்மா போற்றி
11. ஓம் ஆறுதப்பு நூறுபிழை பொறுப்பாய் போற்றி
12. ஓம் ஆறு ஆதாரமாம் அணங்கே போற்றி
13. ஓம் ஆற்று மணல் லிங்கம் அமைத்தாய் போற்றி
14. ஓம் ஈசன் பங்கில் இருப்பாய் போற்றி
15. ஓம் உடுக்கையில் பாம்பை உயர்த்தாய் போற்றி
16. ஓம் உன்னைப் பணிந்தவர்க்கு உற்ற துணை போற்றி
17. ஓம் ஊத்துக்காட்டின் உறவே போற்றி
18. ஓம் எங்கும் நிறைந்த நிறைவே போற்றி
19. ஓம் எச்சிலும் தீட்டும் ஏற்பாய் போற்றி
20. ஓம் எட்டெழுத்தாகி இனிப்பாய் போற்றி
21. ஓம் எல்லா உலகும் ஈன்றாய் போற்றி
22. ஓம் எல்லார்க்கும் தாயாய் இருப்பாய் போற்றி
23. ஓம் ஏழையர்க்கு அடைக்கலம் ஆனாய் போற்றி
24. ஓம் ஒப்பேதுமில்லா உயர்வே போற்றி
25. ஓம் ஓங்காரமென்னும் உருவே போற்றி
26. ஓம் கச்சிப்பதியின் காமாட்சி போற்றி
27. ஓம் கடும்பாடி எல்லையெல்லாம் காப்பாய் போற்றி
28. ஓம் கடைக்கண் நோக்கம் அருள்வாய் போற்றி
29. ஓம் கண்ணபுரத்தின் காரணி போற்றி
30. ஓம் கரகத்தில் அமரும் கருமாரி போற்றி
31. ஓம் கலியுகம் கண்ட திரிபுரை போற்றி
32. ஓம் கற்பகம் அருளும் காமதேனு போற்றி
33. ஓம் கனகசபை நடத்தும் கபாலி போற்றி
34. ஓம் காசிவன நாட்டிலே கன்னியாகுமரி போற்றி
35. ஓம் குப்பத்திருக்கும் கொலுவே போற்றி
36. ஓம் கும்பத்தின் மீதிருந்து கொஞ்சுவாய் போற்றி
37. ஓம் கைலாசத்தின் காவலே போற்றி
38. ஓம் கோலியனூரின் கொலுவே போற்றி
39. ஓம் சந்நிதிக்கெல்லாம் சந்நிதி போற்றி
40. ஓம் சந்தேகம் நீக்கும் சாயுச்சியே போற்றி
41. ஓம் சப்தகன்னியாய்ச் சமைந்தாய் போற்றி
42. ஓம் சமயபுரத்தின் தமிழே போற்றி
43. ஓம் சாம்பிராணி வாசமாய்ச் சார்வாய் போற்றி
44. ஓம் சிங்கம் ஏறும் சிறப்பே போற்றி
45. ஓம் செக்கச் சிவந்த சிங்காரி போற்றி
46. ஓம் செடிலும் தேருமாய்ச் சிறப்பாய் போற்றி
47. ஓம் சூலம் ஏந்தும் சுடரே போற்றி
48. ஓம் சூனியம் எல்லாம் சுடுவாய் போற்றி
49. ஓம் சேலம் கோட்டைச் சிறப்பே போற்றி
50. ஓம் தண்டு மாரியாய்த் தழைப்பாய் போற்றி
51. ஓம் திண்டுக்கல் கோட்டையில் திளைப்பாய் போற்றி
52. ஓம் திருநீற்றுக் கோட்டை திகம்பரி போற்றி
53. ஓம் திருவிளக்கின் நாயகத்திறமே போற்றி
54. ஓம் திருவேற்காட்டு தேவி போற்றி
55. ஓம் தில்லை வனத்தின் திருவே போற்றி
56. ஓம் தீராவினையெல்லாம் தீர்ப்பாய் போற்றி
57. ஓம் தெய்வக்கொலுவில் திளைப்பாய் போற்றி
58. ஓம் தேசமெல்லாம் முத்தெடுக்கும் தேவி போற்றி
59. ஓம் தேசவிளக்கெலாம் ஆனாய் போற்றி
60. ஓம் நம்பினோர் நாவில் நவில்வாய் போற்றி
61. ஓம் நாகக்கன்னியே நல்லமுத்து போற்றி
62. ஓம் நாகக்கடையில் நடப்பாய் போற்றி
63. ஓம் நாகம் அணிந்த நங்கை போற்றி
64. ஓம் நாடும் வீடும் காப்பாய் போற்றி
65. ஓம் நாற்கோணச் சக்கரத்தை நாடுவாய் போற்றி
66. ஓம் நித்தியகல்யாணி நீலிபரஞ்சோதி போற்றி
67. ஓம் நெருப்பின் நிறமாய் நிற்பாய் போற்றி
68. ஓம் நோவுநொடிக்கோர் மருந்தே போற்றி
69. ஓம் பகைத்தவர் மார்பைப் பிளப்பாய் போற்றி
70. ஓம் படவேட்டில் அமர்ந்த பராசக்தி போற்றி
71. ஓம் பட்டத்தழகி படைமுகத்தாய் போற்றி
72. ஓம் பண்ணாரி வாழும் பராபரி போற்றி
73. ஓம் பாதாளம் எல்லாம் பரந்தாய் போற்றி
74. ஓம் பார்வதியாகிப் பரிந்தாய் போற்றி
75. ஓம் பாவாடைக்காரி பராபரியே போற்றி
76. ஓம் பில்லி பிசாசுகள் அகற்றுவாய் போற்றி
77. ஓம் பிள்ளை வரம் தரும் பெரியாய் போற்றி
78. ஓம் புவனமெல்லாம் போற்றும் பூவழகி போற்றி
79. ஓம் பூரணமாகிய பொலிவே போற்றி
80. ஓம் பூவாய்ச் சொரியும் புதுமையே போற்றி
81. ஓம் பெரியபாளையத்தின் பேச்சியே போற்றி
82. ஓம் பெருமாளின் பின்னே பிறந்தாய் போற்றி
83. ஓம் மக்களுக்கு உகந்த மாதரசி போற்றி
84. ஓம் மகுடமுடிகொண்ட மனோன்மணி போற்றி
85. ஓம் மங்கை உருவின் மகராசி போற்றி
86. ஓம் மணிமந்திர சேகரித்தாயே போற்றி
87. ஓம் மணிவிளக்குமேல் ஏறும் மாதா போற்றி
88. ஓம் மலையனூர் மகிழ்ந்த மாண்பே போற்றி
89. ஓம் மலையாள தேசத்து மகமாயி போற்றி
90. ஓம் மழையாய் விளங்கும் மாரி போற்றி
91. ஓம் மாங்கல்யம் காக்கும் மங்கலி போற்றி
92. ஓம் மாயி மகமாயித்தாயே போற்றி
93. ஓம் முக்கோணத்துள் மூலப்பொருளே போற்றி
94. ஓம் முத்துவடம் அசையும் முலைப்பால் போற்றி
95. ஓம் மூலாதாரத்தின் முதல்வி போற்றி
96. ஓம் யாதும் ஆகி நின்றாய் போற்றி
97. ஓம் வணங்குவோர்க்கு வாழ்க்கை அளிப்பாய் போற்றி
98. ஓம் வந்தமனை வாழ வருவாய் போற்றி
99. ஓம் வருத்தம் தீர்க்கும் வளமே போற்றி
100. ஓம் வலியோர் மார்பைப் பிளப்பாய் போற்றி
101. ஓம் வாக்குத் தமிழாய் வருவாய் போற்றி
102. ஓம் வாதபித்த சீதசுரம் காப்பாய் போற்றி
103. ஓம் வார்ப்புச் சிலையாய் வருவாய் போற்றி
104. ஓம் வீராம்பட்டணத்து விளக்கே போற்றி
105. ஓம் வெள்ளிக்கிழமை விளைவே போற்றி
106. ஓம் வேப்பம் பாலாய் விளைவாய் போற்றி
107. ஓம் வேப்பிலை செய்யும் விந்தையே போற்றி
108. ஓம் வேம்புரதம் ஏறும் வித்தகி போற்றி போற்றி

அந்தந்த திருத்தலத்திற்குச் சிறப்பாக உள்ள அருள்மிகு மாரியம்மன் பாடலுடன் 108 போற்றியை நிறைவு செய்திடல் வேண்டும்.

மணிவாசகர் கண்டதும் விண்டதும்

ஸ்ரீ மாணிக்கவாசகர்

சைவ சமயக் குரவர் நால்வரில் தேவாரம் பாடிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவருக்கும் வேறுபட்டவராக விளங்குபவர் திருவாசகம் பாடிய மணிவாசகராவார். நால்வர் பாடல்கள் மீது இறைவனுக்கு உவப்பிருந்தாலும் மணிவாசகர் பாடலில் மட்டும் ஓர் இழையளவான கூடுதல் உவப்பு இருந்ததாகத் தெரிகிறது. அதனால் தான் அதைத் தன் கைப்பட எழுதிக் கொண்டான் எனத் திருவாசகத்தின் வழி மணிவாசகரைப் புகழ்தல் உண்டு. இதுபோலவே அவன் ஆட்கொண்டதிலும் ஒரு வேற்றுமை இருந்தது.

தேவாரம் பாடிய மூவரில் சம்பந்தரைப் பால் கொடுத்து எளிமையாக ஆட்கொண்ட ஆண்டவன், அப்பருக்கும், சுந்தரருக்கும் சோதனைகளைக் காட்டியதன் மூலம் ஆட்கொண்டான். இவ்வாறு இயல்பாகவோ சோதனையாகவோ ஆட்கொள்ளாமல் மணிவாசகரை வியப்பில் ஆழ்த்தி அதிசயிக்குமாறு ஆட்கொண்டது ஆன்மிக உலகில் பெரிதாகப் பேசப்படுவதாக உள்ளது.

மேலும் காட்சி நல்கிய வகையில் இறைவன் நால்வர்க்கும் ஒரே வகையாகக் காட்சி நல்கவில்லை. தோடுடைய செவியனாக வந்து ஞானப்பால் ஊட்டிய இறைவனைப் பெம்மான் இவன் எனச் சுட்டி உணரக் கூடிய காட்சியாகப் பதிவு செய்கிறார் திருஞானசம்பந்தர். அப்பரடிகளோ இறைவன் தனக்குத் தோன்றாத் துணையாக இருந்ததைப் பதிவு செய்கிறார். சுந்தரர் இறைவனைப் பித்தனாகப் பார்த்தார். மணிவாசகரோ ஞான குருவாக இறைவன் காட்சி நல்கியதைப் பதிவு செய்கிறார். மணிவாசகர் கண்ட இக்காட்சிதான் ஆன்மிக உலகில் ஏனைய மூவர் கண்ட காட்சியிலும் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது எனலாம். ஏனெனில், மூவர் கண்ட காட்சி மின்னலைப் போல் தோன்றி மறைந்து விட்டது.

பொதுவாக ஒரு குழந்தை ஒரு பொருளைக் கருத்தோடு பார்க்காத பார்வை போலச் சம்பந்தர் 'பெம்மான் இவன்' என்றார். அக்காட்சியில் சம்பந்தர் இறைவனைத் தோடுடைய செவியனாகக் கண்டார் என்ற அளவோடு காட்சி மறைந்து விடுகிறது; நிலைத்து நிற்கவில்லை. அதுபோல் சமணத்திற்குச் சென்ற அப்பர் வாழ்வில், அவர் தம் தமக்கை திலகவதியாரால்

தமிழாகரர் தெ.முருகசாமி

சைவத்திற்கு மாறும்போது இறைவன் தோன்றாத் துணையாயிருந்து மனதில் காட்சி நல்கினானேயன்றி ஊனக் கண்ணால் காணும் காட்சியனாய் அப்பருக்குத் தொடக்கத்தில் அமையவில்லை. சுந்தரரை இறைவன் மானுடப் பித்தனாக வந்து தடுத்தாண்ட நிலையில் திருவருட்டுறையில் சிவலிங்க ஐக்கியமாகும்போது கண்டும் காணாக் காட்சியாகவே இருந்ததன்றி நீண்ட நேரம் கண்டு அனுபவிக்குமாறில்லை.

ஆனால், மணிவாசகருக்கோ இறைவன் ஓர் ஆன்மாவைப் பக்குவப்படுத்த வேண்டும் என்ற பரங் கருணையால் நிலத்தை சீர்படுத்தி விதை விதைப்பது போல அவன் முதலில் குதிரை வாங்க வந்த வாதவூரர் உள்ளத்தில் தங்கியதால் பக்குவம் அடைந்துவிட்ட வாதவூரர் தன் உள்ளத்து வெளிப்பாட்டைக் கண்ணால் காணத் தகும் பரம்பொருளாகவே இறைவனைக் குரு வடிவில் கண்டு களித்தார். அக்காட்சி, கண்ணை விட்டும் கருத்தை விட்டும் அகலாப் பெருங்காட்சியாய் மணிவாசகருக்கு அமைந்து விட்டது. இதைத் தான் திருவாசகத்தின் தொடக்கமாகிய சிவபுராணத்தில் "சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்' எனத் தன் உள்ளத்துக் காட்சியைக் கூறிய பின் திருவண்டப் பகுதியில் "கண்ணால் யானும் கண்டேன் காண்க" என்று வெளிப்புறமாகக் கண்ட காட்சியை விண்டுரைத்தார். இது போன்றதொரு நிலையை இறைவன் தேவாரம் பாடிய மூவர்க்கும் நல்கவில்லை. எனவே, இறைக் காட்சியனுபவமென்பது "மனிதன் சுவாசிக்காமல் உயிர் வாழ முடியாததைப் போல அவனது உள்ளத்தில் ஏதேனும் ஒன்று தோன்றாதபோது வெளியில் எந்த ஒன்றையும் காண முடியாது'' என்ற சுவாமி விவேகானந்தரின் கருத்தாகத்தான் மணிவாசகர் இறைவனைக் கண்டு விண்டார் எனலாம்.

இங்ஙனம் உள்ளும் புறம்பும் இறைவனைக் கண்டது பற்றி ஆங்காங்கே நினைவு கூர்வார் போலப் பலப் பல இடங்களில் கூறி இறையருளை அனுபவிக்கின்றார் மணிவாசகர். இக்கருத்திற்கான முதற்சான்றைத் திருப்பள்ளி எழுச்சிப் பாடலில் கீழ்க்கண்டவாறு காணலாம்.

"செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே!"

இப்பாடல் கண்ணால் கண்ட இறைவனைப் பாவால் ஓவியம் தீட்டிக் காட்டுகிறது. முதல் காட்சியில் இறைவன் தன் இருப்பை உறுதிப்படுத்துவான் வேண்டி நெருப்பு போன்ற தம் இருப்பிடம் இது எனக் காட்ட வேண்டித் திருப்பெருந்துறையாகிய கோயிலைக் காட்டினான். மூன்றாவதாக இறைவன் தான் ஓர் வெற்றாள் அல்லன், உயிர்ப்புடையவன் என்பதை உணர்த்திக் காட்டவே ஞானாசிரியனாகக் காட்டிக் கொண்டான். இம்மூன்று காட்சியையும் மணிவாசகர் கண்டார். இவற்றை அவர் கண்டாராயினும் அவராகக் கண்டதாகக் கூறவில்லை. ஆண்டவன் தன்னைக் காட்டியதால் மணிவாசகர் கண்டார் என்ற நுட்பம் ''காட்டி'' என்ற சொல்லுக்குள் அடங்கிக் கிடக்கின்றது. இதையே வேறு வகையாகக் கூறினால் அவன் தன்னைக் காட்டாமல் மணிவாசகர் கண்டிருக்க மாட்டார் என்பது வெளிப்படையாகிறது. இங்ஙனம் காட்டிய காட்சி தேவாரம் பாடிய மூவர்க்கும் போல் தோன்றி மறைந்த காட்சியன்று. நிலைத்த காட்சியாக இருந்ததால் மணிவாசகர் இறைவனைக் கண்டதற்குப் பலனாக அவர் ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்டார் என்பதை ''வந்து ஆண்டாய்" என்ற அவரது வாக்காலேயே உணர முடிகிறது.

அங்ஙனம் ஆண்டவன் மணிவாசகரை வந்து ஆண்டபோது இருந்த நிலையைக் கூறும்போது,

"அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாம்
குன்றே அணையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ"

என்றார்.

குதிரை வாங்க வந்தபோது அரசன்

திருவாதவூரர் ஆத்மநாயகர் ஆலயத்தினை கட்டுதல்.

கொடுத்தனுப்பிய உடைமையிருந்தது. அதனைப் பின்னர் மணிவாசகர் தனக்குக் கோயில் கட்டும் நிலையில் ஆண்டவன் பெற்றுக் கொண்டதாகக் கருதலாம். ஆனால், உடைமையை ஆட்கொள்வதற்கு முன் ஆவியையும், உடலையும் பெற்றுக் கொள்கிறான். உடைமையைப் பெற்றதால் இறைவனுக்குக் கோயில் கிடைத்தது போல ஆவியையும் உடலையும் பெறுவதால் ஆண்டவனுக்குக் கிடைக்கப் போவது யாதொன்றும் இல்லை என்பதே உண்மையானாலும் அவ்விரண்டையும் (ஆவி, உடல்) பெற்றதால் அவனுக்கு திருவாசகம் கிடைத்தது என்றதே ஈண்டுள்ள பேருண்மையாகும்.

ஆவியை ஆட்கொள்வதன் மூலம் ஆவியைத் தாங்கும் உடலையும் ஆட்கொண்டான் என்பது கருத்து. அதாவது உடலோடு கூடிய ஆவியையே இறைவன் ஆட்கொண்டான் என்பது கருத்து. இது எதுபோன்றதெனில் காற்றுள்ள ரப்பர் வளையத்தைத் (டியூப்) தாங்கும் சக்கரந்தான் (டயர்) கார் ஓட்டப் பயன்படும்; அதுபோல மணிவாசகரது ஆவிக்குள் தங்கிய இறைவன் அருளால் அவரது உடலும் இயங்குவதாயிற்று. இங்ஙனம் ஆவியும் உடலும் இயங்கும் நிலையில் திருவாசகம் வெளிப்பட்டது என்பது கருத்தாகும். ஆக, இறைவனைக் குருவாகக் கண்டபோதே மணிவாசகர் தம் ஆவியையும் உடலையும் உடைமையையும் ஆண்டவன் ஆட்கொண்டது பற்றி விண்டுறைக்கும் கருத்தாக இன்னும் சில பாடல்களில் ஆங்காங்கே நினைவு கூர்ந்து பாடுகிறார்.

சிவ புராணத்துள் 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்றார். இதில் 'இன்று' என்ற சொல் ஆட்கொண்ட நிகழ்காலத்தைக் குறிக்கும் செஞ்சொல்லாகும். இறைவன் செந்தழல் புரைதிரு மேனியைக் காட்டியபோதே பொன்னடிகளையும் காட்டியுள்ளான். அவைகளைக் கண்ணாரக் கண்டதால் தான் 'கண்டு' என்று கூறினார். குதிரை வாங்க வந்தவர் ஆண்டவனைக் கண்டு அனுபவித்த நிலையிலேயே உலகப் பற்றை முற்றிலும் நீத்து விட்டதை உறுதிப்படுத்துவார் போல 'வீடுற்றேன்' என்றார். ஞால வாழ்வின் பற்றை நீக்கி ஞானப் பற்றைக் கொண்ட விடுதலை தான் இம்மையில் மணிவாசகருக்கு ஆண்டவன் அருளிய வீடு பேறு.

இத்தொடருக்குள் ஓர் உட்குறிப்பு பொதிந் துள்ளது. சிவ புராணத்துள் இத்தொடர் 32 ஆவது ஆகும். சமயக் குறவர் நால்வரும் முக்தியடைந்த வயதைக் குறிக்கும் பழம் பாடலாகிய 'அப்பருக்கு எண்பத்தொன்று, அருள்வாதவூரருக்குச் செப்பிய நாலெட்டில் தெய்வீகம்' என்ற குறிப்பில் மணிவாசகர் 32ஆம் வயதில் வீடு பேறுற்றதாகக் கூறுவர். மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் என்ற சிவ புராணத்தின் 32ஆம் தொடர் எதிர்கால முத்திப் பேற்றைச் சேர்த்துக் கூறியதாக அமைந்தது எனக் கருதுவதுண்டு. இப்படியாக இன்று எனக் கூறிய ஆட்கொண்ட அந்த நாளில் இன்னும் என்னவெல்லாம் நடந்தன என்பன பற்றி மணிவாசகர் கோயில் திருப்பதிகத்தில்,

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற
நினைந்தேன் நீயலாற் பிறிது மற் றின்மை"



திருவாசகத்திற்குப் பொருள் அம்பலவாணனே எனச் சொல்லி
மாணிக்கவாசகர் சிவச்சோதியில் கலத்தல்.

என்பதாகக் கருத்துக்களைப் பதிவு செய்கிறார்.

ஆட்கொண்ட அன்றே மணிவாசகரின் மல இருள் நீங்கியுள்ளது. அங்ஙனம் நீங்கிய தூய உள்ளத்தில் சூரியப் பிரகாசமான ஞான ஒளி தோன்றியதால் இடைவிடாது நினைக்கும் பேறு பெற்றார். இந்நினைப்பற நினைக்கும் ஆதீத நிலையில் உள்ளவரேயன்றிப் பிற எவரும் எல்லாமாய் உள்ள இறைவனைக் காண முடியாதெனக் கூறுகிறார். இக்கருத்தை நிறுவுவார் போல மணிவாசகர் திருப்பள்ளியெழுச்சிப் பாடலில் **"கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை"** என இறைவனை நினைப்பற நினைப்போரன்றிப் பிறர் காண மாட்டார் என்பதை உறுதிப்படுத்தினார். இத்திருப்பள்ளியெழுச்சிப் பாடல், இறைவனைப் பள்ளியெழுப்புவோர் பாடுவதாக அமைந்தது. ஆனால் மேலே கூறிய, **"செந்தழல் புரை திருமேனியும் காட்டி, மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று, அன்றே என் தன் ஆவியும், உடலும் உடைமை எல்லாம், இன்றெனக் கருதி"** என்ற பாடலும் பாடல் வரியும் மணிவாசகர் தாமே கண்டு அனுபவித்துப் பாடியதாக உள்ளவை. அதாவது இவையெல்லாம் தன் கூற்று, கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை என்றது பிறர் கூற்று. இரண்டையுமே மணிவாசகர் தான் பாடினாரென்றாலும், "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்ற கூற்றுக்கு மாறாக மணிவாசகர் ஆண்டவனைக் கண்ணால் கண்டு அனுபவித்ததை விண்டுரைத்தவர் எனலாம். அதனால் அவர் **"கண்ணால் யானும் கண்டேன் காண்க"** என உலகோர்க்கு உறுதிப்பட உரைத்தார். இதில் 'யானும்' என்றது அவ்வப்போது கண்டு அனுபவித்த கூட்டத்தார் போல அதாவது வாழையடி வாழையாய்க் கண்டனுபவித்த கூட்டத்துள் யானும் ஒருவன் எனத் தம்மை பதிவு செய்து கொள்கின்றார் என்பது கருத்து.

எனவே, இக்கட்டுரையின் சாரமாக உணரப்படுவது யாதெனில் அவன் அருளே மணிவாசகரை ஆண்டவனைக் காணச் செய்தது என்பதும் அதனால் அவனை அவர் விண்டுரைத்தார் என்பதுமே ஆம் எனலாம்.

வாழையடி வாழையென விளங்கிய வண்ணச் சரபம் அடிகளார்...

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நெல்லைச் சீமையில் (22.11.1839 – 5.7.1898) செவ்வல் ஜமீன் பகுதியில் தோன்றி, தமிழகத் திருத்தலங்கள் தோறும் சென்று ஏறத்தாழ ஐம்பதாயிரம் பாடல்களைப் பாடிய அருட்கவி வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார். அருணகிரிநாதரின் மறுபிறவியாகவே தம்மைக் கருதியவர் இவர். சந்தப் பாடல்கள் பாடுவதில் சிறந்து விளங்கினார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய புதிய சந்தங்களை உருவாக்கினார். அதனால் வண்ணச் சரபம் எனப்பட்டார். 'சரபம்' என்றால் சிம்புள் பறவை: சிங்கத்தையே தூக்கிச் செல்லும் ஆற்றல் படைத்ததாம். எட்டுக் கால்கள் அதற்கு இருக்குமாம். வண்ணம் அதாவது சந்தம் பாடுவதில் அத்தகைய ஆற்றல் கொண்டவராம் தண்டபாணி அடிகளார். அதனால்தான் வண்ணச் சரபம் என்று போற்றப்பட்டார்.

சைவமும் வைணவமும் ஒரே சமயத்தில் அடிகளாரை ஈர்த்திருந்தன. ஆனால், அடிப்படையில் இவர் முருகதாசர். இறையடியார்களைப் பாடும் பொழுது நம் வள்ளலார் 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினர்' என்பார். அவ்வாறு வாழையடி வாழையென நம் தண்டபாணி அடிகளாரும் அங்ஙனம் விளங்குகின்றார் என்பதை இங்கு நாம் காண்போம். திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர், ஆழ்வார்பெருமக்கள், அருணகிரிநாதர் போன்றோரைப் பின்பற்றி அடிகளார் எங்ஙனம் பாடல்கள் பாடியுள்ளார் என்பதைச் சற்று காண்போம்.

சம்பந்தரும் வண்ணச் சரபமும்

தண்டபாணி அடிகளார் சம்பந்தரைத் தம் சத்குருவாகக் கருதினார். எங்கள் சத்குருவாம் தமிழ் விரகனைப் போல் என்பது இவர் வாக்கு. தம் சத்குருவின் வழி நின்று பல்வேறு சந்தங்களைப் படைத்துப் புகழ் சேர்த்தார்.

(அ) மாலை மாற்று:

ஒரு பாடலை முதலிலிருந்து படித்தாலும் இறுதியிலிருந்து படித்தாலும் ஒரே தன்மையில் அமைவது 'மாலை மாற்று' எனப்படும். சம்பந்தர் சீர்காழிப் பதிக்குரிய தேவாரப் பதிகங்களில் 'மாலை மாற்று' எனும் இப்பகுதியை அமைத்தார். அவரை அடியொற்றி நம் அடிகளாரும் 'மாலை மாற்று' பாடல் பாடினார். இதோ சம்பந்தர் 'மாலை மாற்றுப்' பாடல்களுள் ஒன்று:

"யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா!"

இப்பாடலை இறுதியிலிருந்து படியுங்கள்; முதலிலிருந்து படிப்பது போலவே இருக்கும். இனி நம் அடிகளார் பாடிய மாலை மாற்றுப் பாடல்களுள் ஒன்று:

"வாகா வீரா காசா காமோ
தாகா சீரா போகா காரா
ராகா காபோ ராசீ காதா
மோகா சாகா ராவீ காவா"

இப்பாடலையும் இறுதியிலிருந்து படித்தால்

கவிமாமணி டாக்டர் வேலூர் ம.நாராயணன், எம்.ஏ.பி.எச்டி.,

முதலிலிருந்து படிப்பது போலவே இருக்கும். இவை இரண்டுமே நெடில் வண்ணத்தால் அமைந்த பாடல்களாகும்.

ஆ) ஏகபாதம்:

ஒரு பாடலின் நான்கு அடிகளும் ஒரே தன்மையில் அமையும்: ஆனால், பொருள்கள் வேறுபட்டு நிற்கும். இவ்வகைப் பாடல்கள் 'ஏகபாதம்' எனப்படும். சம்பந்தர் திருப்பிரமபுரம் பதிகத்தில் 'ஏகபாதம்' எனும் இவ்வகை சித்திரக் கவியைச் செய்து காட்டினார்.

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்

நாம் அடிகளார் முருகனைப் பற்றிப் பாடிய 'ஏகபாதத்'துள் ஒன்று:

'முருக வேடன் முதற்குரு நாதனே
முருக வேடன் முதற்குரு நாதனே
முருக வேடன் முதற்குரு நாதனே
முருக வேடன் முதற்குரு நாதனே'

இது கலிவிருத்தத்தில் அமைந்த ஏகபாதம். அடிகளார் திருமால் மீது ஏகபாதமும் அந்தாதித் தொகையும் அமைய முப்பது பாடல்களடங்கிய 'அரியேகபாதத் தந்தாதி' எனும் தனி நூலையே பாடியுள்ளார் அவற்றுள் ஒன்று:

'ஒருவத் தகாதன நாரா யணன்பதத்
தொண்சுவடே
ஒருவத் தகாதன நாரா யணன்பதத்
தொண்சுவடே
ஒருவத் தகாதன நாரா யணன்பதத்
தொண்சுவடே
ஒருவத் தகாதன நாரா யணன்பதத்
தொண்சுவடே'

இந்த ஏகபாதப் பாடல்களுக்கு ஒவ்வொரு தொடருக்கும் வெவ்வேறு பொருட்கள் உண்டு; எழுதப்புகின் பெருங் கட்டுரையாக அமையும். அடியாரே இவற்றிற்குப் பதப் பொருள், கருத்து, ஞாயம், இலக்கணம் என்னும் நால்வகை விளக்கங்களை வரைந்துள்ளார்.

அடிகளார் ஏகபாதம் பாடுவதோடு அமையாமல் அந்த ஏகபாதத்தை உதடுகள் ஒட்டாமல் பாடிப் புதுமையும் செய்துள்ளார். 'முருகன் ஏகபாதத்து இதழகலந்தாதி' எனும் பெயரில் பாடி உரையும் எழுதியுள்ளார்.

இ) எழு கூற்றிருக்கை:

இறைவனின் ஏழு சிறப்புகளை அமைத்துப் பாடுவதற்கு எழுகூற்றிருக்கை என்று பெயர்.

சம்பந்தர் சீர்காழிக்குரியதாக எழு கூற்றிருக்கை பாடினார். ஆனால், எழுகூற்றிருக்கை பாடியதோடு அமையாமல் எட்டு, ஒன்பது, இருபது கூற்றிருக்கை வகைகளையும் பாடிப் புதுமை செய்தார். மேலும் 'சதுரங்கப் பந்தம்' என்றொரு சித்திரக் கவியையும் அடிகளார் படைத்தார்.

மாணிக்கவாசகரும், வண்ணச் சரபமும்:

'முத்தமிழ் அமைச்சன்' என்று மாணிக்க வாசகரைப் போற்றும் அடிகளார், திருவாச கத்தில் பெரிதும் தோய்ந்திருக்கின்றார். அதனால், மாணிக்கவாசகரைப் போலவே, பத்துப் பத்தாகப் பாடித் தலைப்பிலேயே பத்துக்குச் சிறப்பளிக்கும் மரபினை நம் அடிகளாரும் போற்றியுள்ளார். மாணிக்க வாசகர் எழுசீர் விருத்தம், ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா ஆகியவற்றால் முறையே அருட்பத்து, ஆசைப்பத்து, கண்ட பத்து ஆகியன பாடினார். நம் அடிகளார் கலித்துறை, கொச்சகக் கலிப்பா, எண்சீர் விருத்தம், கலித்தாழிசை, நிலைமண்டில ஆசிரியப்பா ஆகிய யாப்புகளில் முறையே, திருவருட்பத்து, பொன்னாசைப் பத்து, பெண்ணாசைப் பத்து, புவியாசைப் பத்து, அகவற்பத்து ஆகியன பாடினார்.

மாணிக்க வாசகரின் திருச்சதகம் அடிகளாரைப் பல சதகங்கள் பாட வைத்தது. சீரங்க நாராயண சதகம், செந்திநாயக சதகம், சடகோபர் சதகத் தந்தாதி, நானிலைச் சதகம் எனப்பல சதகங்கள் பாடினார். திருச்சதாங்கம் என்னும் பகுதியைப் பார்த்து அங்கப்பத்து எழுதினார். தசாங்க வகுப்பு என்றும் தனியே இயற்றினார். அடிகளார் மேலும் பல புதுமையான பத்துகளைப் பாடினார். அவற்றுள் சில: *தமிழ்த் துதிக்கு இரங்குபத்து, *மானப்பத்து, *செவி உணர்ச்சிப் பத்து, *அடம் செய்யாப்பத்து, *புகழ்ப்பத்து, *அன்னப்பத்து, *கிளிப்பத்து, *அம்மானைப் பத்து போன்றவையாகும்.

ஆழ்வார்களும் அடிகளாரும்

அடிகளார் ஆழ்வார்ப் பாசுரங்களிலும் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளார்.

'ஆறலைத் துவக்கும் அஞ்சன மேனி
நாற்கவி நம்பியை' என்று திருமங்கையாழ்வாரையும்,

'நளிர்புவி நீழற்கீழ்
விதிமழை தெளிந்த வியன்றமிழ்
ஆயிரம்
மொழிதரு முனிவோன்' என்று நம்மாழ்வாரையும்

'.... மூன்று தமிழ்க்கும்
நால்வகைக் கவிக்கும் ஐந்திலக்
கணந்தெரி
ஆறாம் புலமையன்' என்று திருமழிசை ஆழ்வாரையும் போற்றிப் பாடியுள்ளார் அடிகளார். நம்மாழ்வாரின் திருவாய் மொழியின் முதற்பாடல்.

'உயர்வற உயர்நலம் உடையவன்
எவன் அவன்
மயர்வற மதிநலம் உடையவன்
எவன் அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி
எவன் அவன்
துயரறு சுடரடி தொழுதெழன்
மனனே...!'

என்பதாகும். நம் அடிகளாரும் இதே சந்த நடையைப் பின்பற்றித் தமது திருவ ரங்கத் திருவாயிரம் நூலின் முதற் பாடலாக.

'உலகுகள் முழுமையும் உதவுனன்
எவன்நுவன்
அலகறும் உயிர்களும் அருளினன்
எவன் இருள்
மலமுறும் அவைகெட மலையவன்
எவன் அவன்
நலமலி திருவருள் நமைமிக
விழைவதே...!'

என்று பாடியுள்ளார்.

அருணகிரிநாதரும் அடிகளாரும்:

அருணகிரியின் சந்த ஒலிகளில் தம்மை மிகுதியாக இழந்துவிட்ட அடிகளார் அருணகிரியைப் போலவே சில பாடல் களைப் படைத்தார்.

'திதத்தத்தத் தித்தத் திதிதாதை
தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்தத் திதித்தித்த தேதுத்து
தித்திதத்தா
திதத் தத்தத் துதித்தத்தை தாததி
தேதுதை தாததத்து
திதத் தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி
தீதொத்ததே'

என்று 'த்' கர வர்க்கத்தில் கட்டளைக் கலித்துறையாகப் பாடிய அருணகிரியாரின் பாடல் நம் அடிகளாரைப் பெரிதும் மயக் கியது. விளைவு! சீரங்கத்துப் பெருமானை அதே 'த்' கர வர்க்கத்தில் வெண்வரைக் கலிப்பாவால் பாடினார்.

'தீதுதத்துத் தொத்தத்தே தித்தித்த
தேதேது
தாதுதத்தத் தத்தத் ததிதாரா தாத்தாதா
தூதுதித்த தாதை துதித்துத்
திதத்ததித்தா
தோதுதைத்த துத்தத்தத் தாதூத்
திதித்தீத்தே...!'

அருணகிரிநாதரின் மறு பிறவியாகவே தம்மைக் கருதியவர் அடிகளார். அதே போன்று தம் காலத்தில் வாழ்ந்த வள்ளல் பெருமானை அடிகளார் தாயுமானவரின் மறுபிறவியாகவே கருதினார். கந்தனது சிறப்புகளை விரித்து அருணகிரியார் கந்தர் அலங்காரம் பாடினார். அவரைப் பின்பற்றி நம் அடிகளாரும் தமிழின் சிறப்புகளை விவரித்து 'தமிழ் அலங்காரம்' எனும் இனிய நூலினை **1864**–இல் வேலூரில் பாடினார்.

முருகனால் பெற்ற அநுபூதியை அருணகிரி 'கந்தர் அனுபூதி' என்று பாடினார். அடிகளாரும் முருகனால் தமக்குக் கிடைத்த அனுபவத்தை 'முருகதாசர் அநுபூதி' என்று தம் பெயராலேயே பாடினார். அருணகிரி முருகனது பெருமைகளை அந்தாதி வகையிலே கந்தர் அந்தாதி என்று பாடி விளக்கினார். நம் அடிகளாரோ பற்பலவாய் அந்தாதி வகைகளைச் செய்தார். இங்ஙனம், வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினரான வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளாரின் பெருமைகளைப் போற்றிப் பரவுவது தமிழர்களின் கடமையாகும்.

இக்கட்டுரை உருவாகக் கருவாக அமைந்த நூல் முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கம் அவர்களின் 'தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு. வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார் சிறப்பாய்வு.

"எது சைவம்?"

டாக்டர் திருமதி ராதா தியாகராசன் எம்.ஏ., பி.எச்டி.,

தமிழோடு பின்னிப் பிணைந்து நிற்கும் சைவம் என்ற சொல்லின் பொருள் யாது? பழந்தமிழ் நூல்களான தொல்காப்பி யத்திலோ சங்கத் தொகை நூல்களிலோ சைவம் என்பதோ சிவம் என்பதோ காணப்படுவதில்லை. அதற்குக் காரணம் கூறுவோர், அவை சமய நூல்களல்ல; தொல்காப்பியம் தமிழ்மொழிக்கு இலக்கணம் கூறுவது; அத்தொல்காப்பியம் காட்டும் பொருள் பற்றி எழுந்த இலக்கியங்களின் தொகுப்பே அகம், புறம், நற்றிணை, குறுந்தொகை என்ற தொகை நூல்கள். திருக்குறளும் மண்ணியல் வாழ்க்கைக்குக் கண்ணென வகுத்த அற முதலிய மூன்றையும் அளந்தறிந்து கூறும் அழகும் அமைதியும் உடையது என்பர்.

ஆனால், இவற்றை அடுத்துத் தோன்றிய காப்பிய காலத்தில் சைவம் என்ற சொல் வழக்கிலிருப்பது தெரிகிறது. அதுவும் மணிமேகலையில் சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட பகுதியில் தான் காணப்படுகிறது. அதனை நோக்கும்போது, காப்பிய காலத்தும் அதற்கு முன்பும் சமயத் துறையில் சைவம், சிவம் என்ற சொற்கள் வழங்கின என்று அறிகின்றோம். தொல்காப்பியமும் சங்கத் தொகை நூல்களும், மக்கள் வழிபட்ட தெய்வங்களைக் குறிக்கின்றன.

அக்குறிப்புகளில் சிவனுக்குக் கூறப்படும் உருநலங்களும் செயல் வகைகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. இதனை ஆராயும்போது, நாம் முன்னே சொன்ன தொல்காப்பியம் முதலிய நூல்கள் தோன்றிய காலத்தில் மக்களிடையே தமிழ்ச் சமயமொன்று நிலவிற்று. சமயம் கூறுவது நோக்கமல்லவாதலால் அதனை தொல்காப்பியம் போன்றவை கூறவில்லை என்று நாம் எண்ண வேண்டும்.

சமயம் என ஒன்று அந்நாளில் இல்லையாயின், காப்பியக் காலத்தில், மணிமேகலையில் பல்வேறு சமயங்கள் தோன்றிக் காட்சி வழங்கக் காரணம் இல்லை. சிவனைப் பற்றிய குறிப்புகள் அந்தப் பழைய இலக்கியங்களில் பல்கி இருப்பதால் சிவநெறி சங்க கால மக்களிடையே நிலவிற்றென்பதை நன்கு தெளியலாம். ஆதலால் தான் மணிமேகலையில் சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் சமயவாதிகள் பலருக்கு இடையே சைவ வாதி என ஒருவன் தோன்றுகிறான். சிவ நெறியாகிய சைவம் இருந்திலதாயின், சைவ வாதி தோன்றுவதற்கு இடமேது? எனவே, சைவம் என்பது சங்க காலத்தேயே தமிழகத்தில் நிலவிய சமயம் என்று தெளியலாம்.

'சைவம்' என்ற சொல்லுக்குப் பொருள் யாது? இதற்குப் பொருள் காண வேண்டின் மிகப் பழஞ் சமய நூலாக நிலவும் திருமந்திரத்தைத் தான் நாம் பெற்றிருக்கின்றோம். அதற்குக் காலத்தால் முற்பட்ட சமய நூல் யாதும் இல்லை என்று வரலாறு கூறுகிறது.

"சைவம் சிவத்துடன் சம்பந்தம் ஆவது" என்றுரைப்பது அத்திருமந்திரம். சிவமாவது முழுமுதற் கடவுள்; அதன் உண்மை, தலைமை முதலிய நலன்களை உணர்ந்து அன்பு செய்து தொடர்பு கொள்வது அதனோடு சம்பந்தமாவதாகும். சம்பந்தமுற்றவர் சைவர் எனப்படுவர்; அவர்களுடைய உணர்வும் ஒழுக்கமும் சைவம் என்று சிறப்பிக்கப்படும்.

உலகில் நிலவும் சமயங்கள் பலவற்றிலும் சைவம் ஒரு தனிச் சிறப்புடையது. பிற சமயங்கள் தமது தலைவன் உரைத்த உணர்வு ஒழுக்கங்களை மேற்கொண்டு ஒழுகுவதைச் சமய நெறியாகக் கொண்டவையாகும். அவற்றை ஏன் என்றோ எப்படி என்றோ எதிர்நோக்கி ஆராய்வதற்கு இடம் தருவதில்லை. அவற்றை வகுத்த முதல்வன் பெயராலே, பவுத்தம், சயினம், கிருத்தவம் என்ற பெயர்களால் இயங்குவனவாகும். சைவம் வைணவம் என்ற ஒரு சிலவே, சமய முதற்பொருள் அடியாகப் பெயர் பெற்றவை. அதனால், இச்சமயத்தைத் தோற்றுவித்தவர் யார்? எக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது என்பன போன்ற ஆராய்ச்சிக்கு இடமின்றிக் காலம் கடந்த முதற்பெருஞ்சமயமாக இருந்து வருகிறது.

முதற்பொருளாகிய சிவத்தை அறியும் சிவநெறியோ ஏனைச் சமய நெறிகளினின்றும் வேறுபட்டது. காணப்படும் உலகத்தைக் கொண்டே காணப்படாத சிவத்தைக் கண்டு கொள்வது இதன் தலையாய சிறப்பு. சிவபரம்பொருள் ஒன்று உண்டு. அதுவே இப்பரந்த உலகத்தையும் உயிர்களையும் படைத்தது என்று அறிவுறுத்துவது சைவம் அன்று. அகன்ற உலகத்தையும், உயிர்களையும் கண்டு அவற்றின் வழியாகச் சிவபரம் பொருளையும் அதன் திருவருட் சிறப்பையும் அறிந்து மேற்கொண்டு ஒழுகுவது தான் சைவத்தின் பண்பு.

''பரம்பொருள் ஒன்று உண்டு; அதனைப் பரவி வாழ்தல் கடன்'' என்பதை உணரவும், உணர்ந்து ஒழுகவும், பிறர்க்கு உணர்த்தவும், உணர்த்திப் பிறரை ஒழுகச் செய்யவும் வல்ல தன்மை மக்களுயிர்க்கே உண்டு; அதனால் மக்கள் இனத்தையும் பிறவற்றையும் அடிப்படையாகக் கொண்டு சிவநெறி உண்மை காண உதவுகின்றது.

மொழி வழங்கும் மக்களை உயர்திணை என்றும், அல்லாத உயிர்களையும், உயிரியல் பொருள்களையும் அஃறிணை என்றும் பிரிப்பது தமிழ் இலக்கண மரபு. அதுவே, உயர்திணை ஒருவரை எடுத்து, ஆண் என்றும் பெண் என்றும், அஃறிணை ஒன்றை 'அது' என்றும் குறிக்கும். அந்த அடிப்படையிலேயே

மக்களை அவன் என்றும் அவள் என்றும் ஏனை உயிரினத்தை அது என்றும் வகுத்து, இம்மூன்றும் கொண்டது உலகமாகிய பேரவை என்று சைவ நூல் உரைக்கும்.

இவ்வாறு, அவன், அவள், அது என்ற இவை ஒரு காலத்தே தோன்றுவதும், நிற்பதும், மறைவதும் ஆகிய மூன்று செயல்களை, (வினைகளை) யுடையனவாகும். செயல்களைத் தமிழ் இலக்கணம் வினை என்று குறிப்பது மரபு.

"வினை எனப்படுவது வேற்றுமை
கொள்ளாது.
நினையுங்காலைக் காலமொடு
தோன்றும்"

என்றே தொல்காப்பியம் கூறுகிறது.

முன்னே சொன்ன தோன்றுதல் இருத்தல், மறைதல் என்ற மூவினையும், செயற்கைப் பொருள் எல்லாவற்றிலும் தெற்றென விளங்குகின்றன. இவ்வியல்பு, அவன், அவள், அது என்ற உயிர்த்தொகுதியிலும், காணப்படுவதால், இதுவும் செயப்படு பொருளே ஆகும். செயப்படு பொருளாயின் செய்பவன் ஒருவன் உண்டு என்பது சொல்லாமலே பெறப்படும். அவனே முதற்பொருள்; சிவம் என்று காட்டுவது சிவஞானம். இதனை மெய்கண்டார்,

"அவன் அவள் அது எனும் அவை
மூவினைமையின்
தோற்றிய திதியே; ஒடுங்கி மலத்து
உளதாம்;
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

(சிவஞான போதம் முதல் நூற்பா)

என்று இலக்கணச் சூத்திரம் போல எடுத்து மொழிகின்றார்.

இதற்குப் பொருள் கூற வந்த அருணந்திசிவம்,

"ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று
உரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும்
தான் முதல் ஈறுமாகி
மருவிடும்; அனாதி முத்த
சித்துரு மன்னி நின்றே"

(சிவஞான சித்தியார் சுபக்கம் நூற்பா 21)

என்று உரைக்கின்றார்.

அச்சிவபரம்பொருள் (செய்பவனாகிய முதற்பொருள்) அவன், அவள், அது என்ற மூன்றனுள் ஒன்றோ, வேறோ எனின், வேறாவான்; இம்மூன்றுக்கும் தோற்றமும் மறைவும் உண்டு; அவனுக்கு அவ்வியல்பு இல்லை என்பதற்காகவே "அனாதி முத்த சித்துரு மன்னி நின்று மருவிடும்" என்று குறிக்கின்றார்; மேலும், இவ்வுயிரும் உலகுமாகிய இப்பேரவை (பெருந்தொகுதி) தன்னிலிருந்தே வெளிப்பட்டுத் தன்னிலே ஒடுங்க நிற்கும் முதல்வனாவான் என்பது விளங்க, "தான் முதல் ஈறுமாகி மருவிடும்" என்று கூறுகின்றார்.

அப்பரம்பொருளாகிய சிவன் ஆணாகவோ, பெண்ணாகவோ இல்லாமல் ஆணும் பெண்ணுமாக இருப்பதால் உயிர்கள் ஆணாகவும், பெண்ணாகவும் தோன்றி வாழ்ந்து மறைகின்றன என்பது சைவம். இதனைக் திருக்கடவூர் உய்யவந்த தேவர்

"அம்மையப்பரே உலகுக்கு
அம்மையப்பர் என்றறிக;
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்
– அம்மையப்பர்
எல்லாவுலகுக்கும் அப்புறத்தார்,
இப்புறத்தும்
அல்லார் போல் நிற்பார் அவர்"

(திருக்களிற்றுப் படியார் –பாடல்1)

என்று அறிவிக்கின்றார்.

அச்சிவனார் இவ்வாறு எப்பொருளுக்கும் முதல்வராயின், அவர் எங்கே இருக்கின்றார் என்ற கேள்விக்கு விடை கூறுவது போல, "அம்மையப்பர், எல்லா உலகுக்கும் அப்புறத்தார்; இப்புறத்தும் அல்லார்போல் நிற்பார் அவர்" என்று உய்யவந்தார் உரைக்கின்றார். இதனால், இப்புறத்தும் (இவ்வுலகத்தும்) இதனைச் சேராதவர் போல் (அல்லார்போல்) நிற்பார் எனின் எவ்வாறு இருக்க முடியும் என்று கேட்கலாம்.

அதற்குச் சிவஞானபோதம்,

அவயே தானே ஆய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்கும் அன்றே"

(சிவஞான போதம் – நூற்பா 2)

என்று தெரிவிக்கின்றன. அதாவது, உயிர், அவன், ஆணை வழித் தமது இருவினைக்கு ஏற்பப் போக்கு வரவு புரிய (தோன்றுவதும் மறைவதும் செய்ய) அம்முதல்வன் அவனே ஆய், தானே ஆய், அவனே தானே ஆய் – எல்லாவற்றிலும் வேறாய், உயிரில் பொருள்களோடு ஒன்றாய், உயிர்களும் தானும் உடனாய் – நிற்பன். அதாவது, வேறாய் எல்லா வுலகுக்கும் அப்புறத் தும், இப்புறத்தும் (இவ்வுலகிடத்தும்) ஒன்றாகவும் உடனாகவும் உள்ளார்.

இதனைச் சிவஞான சித்தியார்,

"உலகெலாம் ஆகி, வேறாய்,
உடனுமாய், ஒளியாய் ஓங்கி,
அலகிலா உயிர்கள் கன்மத்து
ஆணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய்; இவற்றின் தன்மை
தனக்கு எய்தலின்றி
நிலவுசீர் அமலனாகி
நின்றனன் நீங்காது எங்கும்"

(சிவஞான சித்தியார் சுபக்–நூற்பா 91)

என்று விளங்குகின்றது.

உலகு உயிர்களோடு கலந்து ஒன்றாயும் உடனாயும் சிவபெருமான் இருப்பானாயின், அவனுக்கு இவற்றின் தன்மை ஏன் உண்டாவதில்லை என்று கேட்கலாம். நம் உயிர், உடலோடு ஒன்றாகவும் உடலும் உயிரும் என உடனாகவும் இருக்கிறது; ஆயினும், உடல் உயிராவதில்லை; உயிர் உடம்பாவதில்லை; அதுபோலவே, அவன் உயிரோடு உடனானாலும், அவன் உயிராவதில்லை; உயிர் அவனாவதில்லை; இவ்வாறே

"உருவொடு கருவியெல்லாம்
உயிர்கொடு நின்று வேறாய்
வருவது போல ஈசன்
உயிர்களில் மருவி வாழ்வன்;
தரும் உயிர் அவனை ஆகா;
உயிரவை தானும் ஆகான்
வரும் அவன் இவை தானாயும்
வேறுமாய் மன்னி நின்றே"

(சிவஞான சித்தியார் – நூற்பா 93)

என்று அருணந்திசிவனார் உரைக்கின்றார்.

உய்யவந்த தேவர் சொன்னவாறு அப்புறத் தானாய் வேறாய் உள்ள சிவன், உயிர்களோடு உடனாகவும், உயிரில் பொருள்களோடு ஒன்றாய்க் கலந்தும் இருப்பது ஏன்? எல்லாவற்றோடும் ஒரு சீராய் இருக்கலாமே? என்று கேட்கத் தோன்றுகிறது. உயிர், உலகு என்ற இரண்டின், உயிர் அறிவுடையது; உலகப் பொருள் அறிவில்லாதது. அறிவில்லாத உலகப் பொருள்கள் முறை தவறாமலும் நெறி பிறழாமலும் ஒழுங்கு கெடாமலும் இயங்கினால் தான் உயிர் அறிவைச் செலுத்தி வாழ முடியும்; அதற்காகத்தான் அப்பெருமான் உலகியற் பொருளில் ஒன்றாகக் கலந்து நிற்கின்றான்.

ஏறிவரும் காருக்குள் எல்லாப் பொறிகளும் ஒழுங்கும் நெறிமுறையும் கொண்டு இயங்கினால் தான், பாகனும் (டிரைவர்) காரை நன்கு ஓட்ட முடியும். அதுபோல அருளுருவாக உள்ள அவன் உயிரில் பொருள்களோடு கலந்து ஒன்றாய் இருப்பது நேர்மையாகிறது. காரோட்டும் பாகனும் செல்லும் இடமும் வழியும் அறியானாயின், அவனுக்குக் காரின் முதல்வன் உடனிருந்து அவற்றை அறிவிப்பான்; அக்காரோட்டியும் மேடு பள்ளம் நோக்காமலும் இடம் வலம் பாராமலும் செல்லும்போது நெறி அறிவிப்பதும் முதல்வன் செயலாகிறது. அதுபோலவே, சிவபிரானும், உயிரோடு உடனிருந்து மயக்கமும் கலக்கமும் தோன்றும்போதெல்லாம் உயிர்க்குத் தெளிவும் ஒளியும் உள்ளிருந்தே உணர்த்துகின் றான். அதனால் அவன் உடனாதல் இன்றியமையா தாகிறது.

இங்கே ஒரு கேள்வி. உடலுக்குள் இருக்கும் சிவன் உயிரோடு உடனிருப்பானாயின், அவன் இருக்கும் இடம் யாது?

அதனை நாவுக்கரசர் போன்ற நல்லறிஞர் கண்டுள்ளனர். **"புந்தி வட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய்யென்பனோ"** என்றும், "என் நெஞ்சில் ஈசனைக் கண்டது என் உள்ளமே" என்றும் அவர் கூறுகின்றார் திருமூலர்,

"பிறவா நெறி தந்த பேரருளாளன்
மறவா அருள் தந்த மாநந்தி யார்க்கும்
அறவாழி அந்தணன் ஆதி பராபரன்
உறவாகி வந்து என் உளம்புகுந்தானே"

(திருமந்திரம்–1784) என்று இசைக்கின்றார்.

–தொடரும்

திருவயிந்திரபுரம்

ஆழ்வார் பெருமக்கள் தங்கள் பாசுரங் களால் மங்களா சாசனம் செய்து போற்றிய திருமால் எழுந் தருளியுள்ள திருத்தலங்களை திவ்ய தேசங்கள் என்று வழங்குவது வைணவ மரபாகும். அத்தகைய திவ்ய தேசங்கள் நூற்றெட்டில் நடுநாட்டில் உள்ள திருவயிந்திரபுரம் முக்கிய மான ஒன்றாகும்.

ஸ்ரீ ஹேமாம்புஜநாயகி ஸமேத ஸ்ரீ தேவநாதன்

இத்தலம் கடலூர் மாவட்டத்தின் தலைநகரான கடலூருக்கு மேற்கில் சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந் துள்ளது. சாதாரணமாக இத்திவ்யதேசம் திருவந்திபுரம் என்று வழங்கப்பட்டாலும் திருஅயிந்திரபுரம், திருஅஹீந்திரபுரம் என்ற பெயர்களாலும் இது கூறப்படுகிறது. இத்தலத்தில் அஹீந்திரன் எனப்படும் அனந்தாழ்வானாகிய ஆதிசேடன் பெருமானால் போற்றி வணங்கியதால் இப்பெயர் ஏற்பட்டது.

இத்திவ்யதேசம் பற்றிய செய்திகளைப் பிரம்மாண்ட புராணத்தில் ஐந்து அத்தியாயங்களிலும், ஸ்காந்த புராணத்தில் நான்கு அத்தியாயங்களிலும் காணலாம்.

இத்தலம் பற்றிய சுவையான புராண வரலாறு ஒன்று உண்டு.

ஒரு சமயம் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. தேவர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களுக்குத் துணையாக வந்த திருமால், தனது சக்ராயுதத்தால் அசுரர்களை அழித்தார். எம்பெருமான் தனது தாக சாந்திக்காக நீர் கேட்கக் கருடாழ்வாரும், ஆதிசேடனும் தண்ணீர் கொணரக் கிளம்பின.

ஆதிசேடன் பூமியைத் தனது வாலால் அடித்துப் பிளந்து தீர்த்தம் கொண்டு வந்து பகவானுக்கு அளித்தார். இப்படி ஆதிசேடனால் திருவாகிய பூமியை வகிண்டு நீர் கொண்டு வரப்பட்டதால் திருவகிண்டபுரம் என்ற பெயர் உண்டாகி தற்பொழுது ஆதிசேஷன் கைங்கர்யத்தால் திருவஹீந்திரபுரம் என்று வழங்கப்படுகிறது.

ஆதிசேடன் திருஉருவைக் கொண்டுள்ள தீர்த்தக் கிணறு இன்றும் பிரகாரத்தில் நாம் நுழைந்தவுடன் இடப்புறத்தில் காணப்படுகிறது. இத்தீர்த்தத்தைத் தெளித்துக் கொண்டால் சகல தோஷங்களும் விலகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை ஆகும். திருமண

-பாச்சுடர் வளவ.துரையன் எம்.ஏ.,

தோஷமும், உடல் உபாதைகளும் உடன் நீங்கும்.

கருடாழ்வாரும் வைகுந்தத்தில் இருந்து விரஜா நதியின் தீர்த்தத்தைக் கொண்டு வந்து பெருமாளுக்கு அளித்தார். இவ்வாறு பெருமாளின் இரண்டு வாகன அடியார்களும் தீர்த்தம் கொண்டு வந்த பெருமை வேறு எந்தத் திவ்ய தேசத்திற்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கருடாழ்வாரால் கொண்டு வரப்பட்ட தீர்த்தமே இங்கு கருட நதியாகி தற்போது கெடில நதியாக ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆலயத்தில் நுழைந்த உடனேயே படிக்கட்டுகளில் நிற்கும் போதே எம்பெருமானின் திருமுக மண்டலத்தைத் தரிசிக்கலாம். பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

தெய்வ நாயகன் எனும் திருநாமத்தைக் கொண்டுள்ள இப்பெருமான் தேவர்களுக்கு நாதனாக இருந்து போர் புரிந்து வெற்றி கொண்டதால் தேவநாதன் எனும் திருப்பெயராலும் போற்றப்படுகிறார்.

வைகானச முறையில் பூஜைகள் நடக்கும் இத்திவ்விய தேசத்தின் எம்பெருமானான தேவநாதன், திருப்பதி பெருமாளான ஸ்ரீநிவாசனுக்குத் தமையனார் என்ற வழக்கும் நிலவி வருகிறது. பெருமாள் சன்னதிக்கு வலப்புறமாகத் தாயார் சன்னதி உள்ளது. செங்கமலவல்லி, வைகுண்டநாயகி என்பன தாயாரின் திருநாமங்களாகும். தேவர்களைக் காப்பதால் ஹேமாம் புஜவல்லி என்றும் பார் எல்லாம் காத்து அருள்பாலிக்கும் தன்மையால் பார்கவி எனும் திருநாமங்களும் வழங்கப்படுகின்றன.

மூலவர் சன்னதிக்கு இடப்புறம் பிரகாரத்தில் உள்ள ஒரு சன்னதியில் பள்ளி கொண்ட பெருமான் காட்சி அளிக்கிறார். அச்சன்னதிக்குச் சற்று முன்பாக தெற்கு நோக்கியவாறு ஸ்ரீமான் நிகாமந்த தேசிகர் தனிச் சன்னதியில் எழுந்தருளி உள்ளார்.

ஸ்ரீதேசிகர் இங்கு 40 ஆண்டுகள் தங்கி இருந்து இப்பெருமான் மீது மும்மணிக் கோவை பாடியருளி உள்ளார். **"அயிந்தை மாநகரில் அமர்ந்தனை எமக்காய்"** என்றும் **"மகிழ்ந்து வாழும் போதிவை நாம் பொன்னயிந்தை நகரில் முன்னாள்"** என்றும் ஸ்ரீதேசிகன் இத்திவ்ய தேசத்தைப் புகழ்கிறார்.

ஆழ்வார்களுக்கும், ஆசார்யார்களுக்கும் சன்னதிகள் உள்ளன இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இராம பிரான் அழகான நெடிய தோற்றமுடன் அருள்பாலிக்கிறார். கோயிலுக்குப் பின்புறமுள்ள பெரிய விசாலமான மண்டபத்தில் ஒரே நாளில் பல திருமணங்கள் இங்கு நடைபெறுவது வழக்கமாகும். திருக்கோயிலின் மேற்கு வாயில் கெடில நதிக்கரையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

திருக்கோயிலின் எதிர் உள்ள கிழக்கு வீதியும், பக்கத்தில் உள்ள தெற்கு வீதியும் சந்திக்கும் இடத்தில் உயரமான மண்டபத்தில் ஆஞ்சநேயர் எழுந்தருளி வேண்டும் வரம் அருளுகிறார்.

தெய்வநாயகன் சன்னதிக்கு எதிரே உள்ள ஹயக்ரீவ மலையில் ஞானத்தையும் கல்வியையும் தரும் ஹயக்ரீவப் பெருமான் குடி கொண்டுள்ளார். இந்த மலைக்கு 74 படிகள் உண்டென்றும் அவை ஸ்ரீமான்

இராமானுஜர் ஏற்படுத்திய 74 சிம்மாசனதியர்களைக் குறிக்கும் என்றும் கூறுவர். ஹயக்ரீவப் பெருமாளின் ஆதித்திருமேனிகள் இந்தியாவில் இரு இடங்களில் மட்டுமே உள்ளன. ஒன்று இத்திவ்யதேசமும், மற்றொன்று மைசூரில் உள்ள பிரகால மடமும் ஆகும்.

திருமாலின் அமிசா அவதாரங்களில் ஒன்றான ஹயக்ரீவ அவதாரத்தை வழிபடுவோர்க்குத் தடையில்லாக் கல்வியோடு தெளிவான ஞானமும் உண்டாகும்.

ஏன உருவில் மருப்பில் உலகை எடுத்தது, உலகமெலாம் உண்டு ஆலிலை மேல் பள்ளி கொண்டது, வாமனனாய் உலகம் அளந்தது, இராமனாகத் தோன்றி சீதா பிராட்டியுடன் கானகம் சென்றது, குன்றம் ஏந்திக் குடையாகக் காத்தது, பார்த்தனுக்குச் சாரதியானது போன்ற திருமாலின் அருஞ்செயல்களைப் போற்றிப் பத்துப் பாசுரங்களில் இத்திவ்ய தேசத்தைத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்து இருக்கிறார்.

இத்திவ்ய தேசத்தில் எழுந்தருளி உள்ள அர்ச்சாவதாரம் நான்கு வகைகளில் ஒன்றான சைத்தம் எனும் வகையைச் சார்ந்ததாகும். அதாவது பகவான் அனாதிகாலமாகத் தானே தோன்றி இருப்பதாகும்.

இத்திருக்கோயில் சுவர்களில் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை முதற்குலோத்துங்கன், விக்கிரம சோழன் மூன்றாம் இராசராசன், முதலாம் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், விஜயநகர மன்னன் அச்சுதராயன் முதலிய அரசர்களது காலத்தவையாக அறியப்படுகின்றன.

இத்திருக்கோயிலில் தீபங்கள் ஏற்றுவதற்காக ஆடுகள் தானமாக வழங்கப்பட்டதோடு, நில தானம், பொன் தானம், பூமி தானம் ஆகியவை கொடுக்கப்பட்டதையும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

பெருஞ்சிங்கன் எனும் மன்னனின் நலம் கருதியே இக்கோயிலின் மேற்குக் கோபுரம் கட்டப்பட்டதாக ஒரு கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

விஜய நகர மன்னன் கல்வெட்டு தெலுங்கு மொழியில் உள்ளது. கி.பி.1216 முதல் கி.பி.1248 வரை ஆண்ட மூன்றாம் இராசராசன் காலத்திய கல்வெட்டு உள்நாட்டுக் குழப்பத்தைத் தெரிவிக்கிறது.

ஒய்சள நாட்டு மன்னன் இரண்டாம் வீர நரசிம்மன் என்பவன் சோழனுக்குத் துணைபுரிந்ததையும், பெருஞ்சிங்கனுக்குத்

துணையாக வந்த இலங்கை மன்னன் பராக்கிரமபாகு போரில் மாண்டதையும் ஒரு கல்வெட்டால் அறிய முடிகிறது.

இத்திருக்கோவிலின் மற்றொரு சிறப்பு இங்கு பெருமாளை மூன்று திருக்கோலங்களிலும் தரிசிக்கலாம். தேவநாதப் பெருமாளாக நின்ற திருக்கோலத்திலும், இருந்த கோலத்தில் அஹிந்திரபுர நாதராகவும், கிடந்த கோலத்தில் பள்ளிகொண்ட நாதராகவும் காட்சி தருகிறார்.

இவ்வாறு ஆன்மிக மணம் கமழ்வதோடு வரலாற்று ஆராய்ச்சிக்கும் இத்திவ்ய தேசம் பெருமை சேர்க்கிறது என்று கூறலாம்.

சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலின் ஆன்மிக நூலகத்தினை 3.6.2009 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் திறந்துவைத்து சிறப்பித்தார். இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் இ.ஆ.ப அவர்கள் அறநிலையத்துறை அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஆன்மிக பெரியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை வடபழநி அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் ஆன்மிக நூலகத்தினை 3.6.2009அன்று மாண்புமிகு குடிசைமாற்றுவாரியத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இந்து சமயஅறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார். இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுசெயலாளர் திரு. க. முத்துசாமி இ.ஆ.ப அவர்கள், அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அறங்காவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

19.6.2009 அன்று சென்னை, அடையாறு, அனந்த பத்மநாப சுவாமி திருக்கோயில் அனந்த மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில் தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி இ.ஆ.ப. அவர்கள், அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் இ.ஆ.ப., அவர்கள், கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரிய அலுவல்சாரா உறுப்பினர்கள், அறநிலையத்துறை அலுவலர்கள், கிராமக்கோயில் பூசாரிகள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

5.6.2009அன்று 13வது நிதி ஆணையத்தின் தலைவர் திரு.விஜய் கெல்கர் அவர்கள் சென்னை, திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலினை ஆய்வுசெய்தார். அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப.அவர்கள் அறநிலையத்துறை அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

மயிலுருவில் அன்னை வணங்கிய திருமயிலாடி

உமாதேவிக்கு சிவபெருமான் காட்சி தந்த தலம் – முருகப் பெருமான் அசுரர்களை வென்ற பூமி – வடதிசை நோக்கிய தவக்கோல முருகன் விளங்கும் கோயில் – வில், அம்பு ஏந்திய கோலத்தில் மயிலைத் தன் பாதணியாகக் கொண்ட ஆபூர்வ முருகன் விளங்கும் தலம் – கண்ணுவ முனிவர் வணங்கிய சுந்தர விநாயகர் கொண்ட கோயில் – விக்கிரம சோழன் கட்டளை ஏற்படுத்திய திருக்கோயில் என, பெருமைகள் பல கொண்ட தலமாகத் திகழ்வது திருமயிலாடி சிவாலயம் ஆகும்.

அன்னையுடன் ஊடல்

உமாதேவி மயில் வடிவம் கொண்டு வழிபட்ட தலங்கள் திருமயிலை, திருமயிலாடுதுறை என்பது அனைவரும் அறிந்ததே. அத்தலத்துள் மூன்றாவது தலமாகத் திகழ்வது திருமயிலாடி ஆகும்.

திருக்கயிலாயத்தில் உமாதேவியுடன் சிவபெருமான் வீற்றிருந்தபோது, இருவருக்கும் இடையே, தங்களுக்குள் யார் அழகு மிகுந்தவர் என்ற விவாதம் ஏற்பட்டது. இணையற்ற அழகு கொண்டவன் நான்தான் என்று சிவபெருமான் கூற, அதற்கு அன்னை உமாதேவியோ தானே ஒப்பற்ற அழகுடையவள் என்றாள். விளையாட்டு, முடிவில் திருவிளையாடல் ஆனது. கோபங்கொண்ட சிவபெருமான் அந்த இடத்தில் இருந்து மறைந்தார். உமாதேவி சிவபெருமானைக் காணாமல் திகைத்து நின்றார்.

தேவர்கள் அசுரர்களின் பார்வையில் படாத வண்ணம், சிவபெருமானை, மயில் உருவில் தேடினாள். பல்வேறு தலங்களிலும் தேடி முடித்து, நிறைவாக திருமயிலாடி வந்து சேர்ந்தாள்.

அங்கே சிவபெருமான் பேரழகனாகத் தோன்றி, உமாதேவிக்குக் காட்சி தந்தார். அன்று முதல் அத்தலத்திலேயே சுந்தரேசப் பெருமானாக வீற்றிருக்கிறார்.

இறைவனைக் கண்ட மகிழ்ச்சியில் மயில் வடிவில் இருந்த அன்னை ஆடி மகிழ்ந்ததால் திருமயிலாடி என பெயர் வந்ததெனக் கூறப்படுகின்றது.

முருகன் தேவர்களை அழித்த தலம்

சிங்கத் தீவில் பத்மாசுரன் என்ற அரக்கன் ஆட்சி செய்து வந்தான். அவன் தேவர்களைப் பகைத்து, பல்வேறு வழிகளில் அவர்களைத் துன்புறுத்தி வந்தான். இந்நிலையில், முருகப் பெருமானின் உதவியை நாட, தேவர்களுக்காக சூரனை அழிக்க போர் புரியத் தொடங்கினான் முருகன்.

ஆனால் சூரனோ, தன் பகைவர்களான தேவர்களை நேரெதிரில் நின்று போர் புரிவதை விட, சூழ்ச்சியினால் வெற்றி கொள்ள முடிவு செய்தான். அதன்படியே

யாகம் வளர்த்து அதிலிருந்து ஜுரதேவதையை வெளிக் கொண்டு வந்தான். அந்த தேவதை மூலம் தேவர்கள் சேனையைக் கடுமையான வெப்ப நோயால் வாட்டி வதைத்தான். இதனால் தேவர்களின் சேனை, தங்கள் சக்தியை இழந்து நின்றது.

இதற்குப் பதிலடியாக, திருமயிலாடியில் வடதிசை நோக்கித் தவமிருந்த முருகன் சீதளாதேவியை வரவழைத்தார். அவளின் துணையோடு ஜுர தேவதையை வென்று தேவர்கள் சேனையின் சக்தியை மீட்டுத் தந்தார். சூரனை வதைத்து, அவர்களை வெற்றி கொண்டார் முருகப் பெருமான்.

தேவர்களின் வெற்றிக்குப் பின் முருகப் பெருமானை வணங்கி நன்றி கூறிய இந்திரன், வடதிசை நோக்கி நிரந்தரமாகத் திருமயிலாடியில் காட்சி தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். அதன்படியே முருகப் பெருமானும் திருமயிலாடியில் நிலைத்தார்.

கண்ணுவ முனிவர்

இதேபோல, பிரம்மனின் புதல்வரான கண்ணுவ முனிவர், தலைசிறந்த சிவ பக்தராக விளங்கியவர். இவர் இக்கோவிலின் வடகிழக்கு திசையில் பிலத்துவாரம் ஏற்படுத்தி, அதன் உள்ளேயும், வெளியேயும் சுந்தர விநாயகனை நிறுவி வழிபட்டார். அதன் மூலம் விநாயகரின் அருளையும் பெற்றார். இதனால் இத்தலம் கண்ணுவாச் சிரமம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த சந்நிதி ஆலயத் திருக்குளத்தில் அமைந்துள்ளது.

இறைவன்

இறைவன் பெயர் சுந்தரேஸ்வரர். கிழக்கு முகமாய் ராஜகோபுர வாயிலை நோக்கிய வண்ணம் அமைந்துள்ளார். இறைவனுக்குப் பெரியாண்டவர் என்ற பெயரும் உண்டு.

பிரகன்நாயகிக்கு இரண்டு சந்நிதிகள். இதற்கு ஒரு சம்பவம் கூறப்படுகின்றது. முன்னொரு காலத்தில் திருப்பணி மேற்கொண்டபோது, அம்மன் சிலை சிதிலமடைந்து விட்டது. இதனால், திருப்பணிக் குழுவினர், இச்சிலைக்கு மாற்றாக, வேறு சிலை வைக்க முடிவு செய்தனர். ஆனால், அன்று ஆலய அர்ச்சகர், ஆலய நிர்வாகிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முக்கியப் பிரமுகர்களின்

கனவில் அன்னை தோன்றினாள்.

உங்கள் குடும்பத்தில் யாரேனும் உடல் ஊனமுற்றாலோ, அல்லது வயதாகி விட்டாலோ அவருக்குப் பதிலாக வேறொருவரை ஏற்றுக் கொள்வீர்களா? ஆனால், என்னை மட்டும் ஏன் மாற்றத் துடிக்கிறீர்கள்? என்று கூறிய அன்னை அவர்களின் கனவிலிருந்து மறைந்தாள்.

மறுநாள் இந்தக் கனவு குறித்து அனைவருமே தங்களுக்குள் பரிமாறிக் கொண்டனர். அதன்படியே புதிய சிலைக்கு தனி சந்நிதி எழுப்பி, பழைய அம்மனையும் சேர்த்து வழிபட்டு வரத் தொடங்கினர்.

மயிலை பாதணியாகக் கொண்ட வேடனாக முருகன்

இவ்வாலயத்தின் உற்சவரான சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையுடன் வில், அம்பு ஏந்தி வேடன் வடிவில் காட்சி தருகின்றார். அசுரர் கூட்டத்தை வில், அம்பு கொண்டு அழித்ததன் ஐதீகம் இது எனக் கூறப்படுகின்றது.

இதேபோல, முருகனின் பாதத்தில் ஒரு காலில் பாதணியும், மறு காலில் மயிலையே பாத அணியாகவும் அமைத்துக் காட்சி தருவது அபூர்வமான காட்சியாகும். ஆலயம் செல்வோர் இந்த அரிய காட்சியை அவசியம் கண்டு மகிழ வேண்டும்.

ஆலய அமைப்பு: கிழக்கு நோக்கி ஐந்து நிலை இராஜ கோபுரம் எளிமையாகக் காட்சி தருகின்றது. அதன் எதிரே வேலாயுத தீர்த்தம் எனப்படும் திருக்குளம் அழகுற அமைந்துள்ளது.

கோபுரத்தை அடுத்துக் கிழக்கு நோக்கிய சுந்தரேஸ்வரர், கருவறையின் தெற்கே குமார விநாயகர், அருகே வடதிசை நோக்கிய பாலசுப்ரமணியர் காட்சி தருகின்றார். இரு கரங்கள் மேல் நோக்கியும், இரு கரங்கள் கீழ் நோக்கியும் தவக் கோலத்தில் நின்று காட்சி தருவதாக ஐதீகம். வடதிசை நோக்கிய பாலசுப்ரமணியர் அரிய கோலமாகும்.

கன்னி மூலையில் சித்தி விநாயர், தெற்கே பத்மாசனக் கோலத்தில் தட்சிணா மூர்த்தி, மேற்கே லிங்கோத்பவர், குபேர மூலையில் மகாலட்சுமி, வடக்கே பிரம்மா, ஜெயதுர்க்கா, எதிரில் சண்டிகேஸ்வரர் என திருவுருவங்கள் அமைந்துள்ளன.

ஆலயத்தில் வடகிழக்கே பிரகன்நாய கியின் இரு சந்நிதிகள் அமைந்துள்ளன. ஈசான மூலையில் நவக்கிரக சந்நிதியும், வளாகத்திற்குள் வில்வ மரம் தலமரமா கவும் விளங்குகின்றன.

தலப் பெயர்கள்: இத்தலம் கச்சி நிருத்தபுரம், வில்வாரண்ய சேத்திரம், கண்ணுவாச்சிரமம், வால்மீகிகயை எனப் பலவாறு அழைக்கப்பட்டாலும், இதன் இன்றைய பெயர் திருமயிலாடி என்பதாகும்.

தொன்மைச் சிறப்பு: இவ்வாலயம் மிகவும் பழமையானது என்பதற்கு ஆலய நுழைவு வாயிலில் 1918ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வறிக்கையில் கூறப் பட்டுள்ள கல்வெட்டு சான்றாக விளங்கு கின்றது. அதில் விக்கிரம சோழன் (கி.பி.1118–1135) தனது பத்தாம் ஆட்சியாண்டில் இவ்வாலயத்திற்குக் கட்டளை வழங்கியதை அறிய முடிகின்றது.

மேலும், இறைவன் பெயர் திரிலோக் கிய மகாதேவீஸ்வரம் உடையார் எனக் கூறப்பட்டுள்ளது.

தரிசன நேரம்: ஆலயம் காலை 6.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் திறந்திருக்கும்.

விழாக்கள்: பிரதோஷம், கிருத்திகை போன்றவை எளிய முறையில் கொண்டாடப் படுகின்றன.

அமைவிடம்: நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் திருமயிலாடி அமைந்துள்ளது. காவிரி நதிக்கும், நூபுர நதிக்கும் இடையில் அமைந்த தலமாக இது திகழ்கின்றது.

சீர்காழியில் இருந்து வடகிழக்கே 6 கி.மீ., சிதம்பரத்தில் இருந்து தென்கிழக்கே 15 கி.மீ. புத்தூர் கடைத் தெருவில் இருந்து கிழக்கே 1 கி.மீ., தொலைவில் திருமயிலாடி அமைந்துள்ளது. சீர்காழி – சிதம்பரம் வழித்தடப் பேருந்துகளில் புத்தூர் கடைத் தெரு பேருந்து நிலையத்தில் இறங்கி 1 கி.மீ., கிழக்கே பயணம் செய்தால் திருமயிலாடி வரலாம். அதேபோல் சிதம்பரம் – பழையாறு வழித்தட பேருந்து மூலமும் திருமயிலாடி வரலாம்.

–படங்கள், கட்டுரை – பனையபுரம் அதியமான்.

உலகம் உய்ய உதித்த உடையவர்

சென்ற இதழ் தொடர்ச்சி..

இவ்வாறு பெரும்நோயில் அகப்பட்டு அசிங்கமான நிலையில் உடம்பு கருகியும் கூட, பெருமாளே வந்து நோயை தீர்க்கட்டுமா என கேட்டபிறகும் கூட, பெருமாளிடம் எதனையும் வேண்டாமல் இருந்த அனந்தாழ்வானின் ஒருபொழுதும், ஒரு பொருளும் பெருமானிடம் கூற வேண்டாத உத்தமநிலையில் அனந்தாழ்வான் வாழும் நிலையை பெருமாள், தொழுநோயை கொடுத்து அனந்தாழ்வானின் பெருமையை உலகிற்கு உணர்த்தினார்.

அனந்தாழ்வாறும் நோய்நீங்கப் பெற்று, ஆச்சாரியன் இராமானுஜர் நியமித்த புஷ்ப தொண்டினை வழக்கம் போல் செய்து வந்தார். இந்த மஹான் சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரத்தில் தோன்றியவராவார். ஒரு நாள் அனந்தாழ்வான் புஷ்பம் பறிக்கும் பொழுது விஷப்பாம்பு ஒன்று அவரை தீண்டிவிட்டது. விஷப்பாம்பு தீண்டியதை பார்த்தும், அவர் ஏதும் நடவாததுபோல் புஷ்பம் பறித்து கொண்டிருந்தார். அருகில் உள்ளவர்கள் விஷமுறிவு மருந்துண்ண சொன்னார்கள். ஆனால் அனந்தாழ்வான் மறுத்துவிட்டார். வழக்கம் போல திருவேங்கட முடையானின் சந்நிதிக்கு மலர்மாலை சாத்த சென்றார். எம்பெருமான் "அனந்தாழ்வானே ஏன் விஷத்தினை முறிக்க மருந்து சாப்பிடவில்லை என கேட்கவும், அதற்கு அனந்தாழ்வான், "கடித்த பாம்பு வலிமையுடையதாக இருந்தால் விஷத்தினால் தாக்கப்பட்டு கடிபட்ட பாம்பாகிய நான், (தன்னையும் பாம்பு போன்ற விஷமுடையவன் என தாழ்த்தி கொள்கிறார்) வைகுண்டம் சென்று பெருமாளை சேவிப்பேன். கடிபட்ட

பாம்பாகிய நான் வலிமையுடையவனாக இருந்தால், விஷம் என்னை ஒன்றும் செய்யாது உயிரோடு இருந்து திருவேங்கட பெருமானாகிய உம்மை சேவிப்பேன். எப்படியும் உயிரோடு இருந்தாலும், இறந்தாலும் பெருமானின் சேவை நிச்சயம் கிடைக்கும் என்று பதில்கூறினார்.

அறிவுடை மகன் அறிவாய் பேசுவதை கேட்டு மகிழும் தந்தையைபோல அனந்தாழ்வான் பதில்கேட்டு பெருமாள் மகிழ்ந்தாராம். ஒரு சமயம் பெருமாள் அனந்தாழ்வானை நோக்கி, "நான் உம்மை

பெ. ராமநாதபிள்ளை, செயல் அலுவலர், திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.

இத்திருமலையினைவிட்டு 'போ' என்று சொன்னால் போவீரோ"? என கேட்கவும், அதற்கு அவர் "நான் போகமாட்டேன்" என்றாராம். மேலும் அதனை சொல்வதற்கு உமக்கு உரிமை இல்லை என்றும் நீரும் இங்கு வந்து குடியேறி உள்ளீர். நானும் இங்கு வந்து குடியேறி உள்ளேன். நீர் நான் வருவதற்கு சிலகாலம் முந்தி வந்தீர். நான் பின்பு வந்தேன் எனவே இருவரும் வந்தேறிகள். என்னை இம்மலையினை விட்டு போக சொல்லும் உரிமை உம்மை தாங்கி நிற்கும் இத்திருமலை ஆழ்வானுக்கே உண்டு அவர் சொன்னால் போகிறேன்

என கூறவும் பெருமாள் மிகவும் மனம்மகிழ்ந்தார்.

மற்றொரு சமயம் அனந்தாழ்வான் போசல ராஜ்யத்திற்கு செல்வதற்காக திருமலையில் கட்டுச்சோறு கட்டிக் கொண்டு மலையிலிருந்து இறங்கினார். கீழே இறங்கி, உணவு உண்பதற்காக கட்டுசோற்றை பிரித்தார். சிற்றெறும்பு இருப்பதை கண்டார். திருமலையில் வாழ்ந்த எறும்பினை அங்கிருந்து கொண்டு வந்துவிட்டேனே என வருந்தினர். குலசேகர ஆழ்வார் தம்முடைய திருமொழியில் "திருவேங்கட சுனையில் மீனாய் பிறக்கும் விதியுடையவன் ஆவேனே, மரமாய் நிற்கும் விதியுடையனாவேனே படியாய் கிடக்கும் விதியுடையவன் ஆவேனே எம்பெருமாள் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே,' –என வாடியிருப்பதை உணர்ந்து, திருமலைக்கு மீண்டும் ஏறி சிற்றெறும்புகளை திருமலையிலேயே விட்டு வந்தார் என்பதும் இவர் வாழ்வில் நடந்த நிகழ்வாகும்.

இம்மகான் ஸ்ரீவேங்டேச இதிகாசமாலா, கோதாசதுச்லோகீ ஆகிய நூலினை எழுதி உள்ளார். இம்மகானின் மகிமையினை கேள்விப்பட்ட எம்பெருமானார் திருமலையில் திருவேங்கடவனை தரிசிக்க விருப்பம் கொண்டு அரங்கனின் அனுமதி கேட்டார். அரங்கனும் அனுமதி அளித்தார். தன் சிஷ்யர்களுடன் பயணம் மேற் கொண்டார். ஆதிவெள்ளறை (மஹிரசேத்திரம்) பெருமாளை வணங்கி கரம்பனூர் பெருமாளை வணங்கி திருக்கோயிலூர் உலகளந்த பெருமானையும் வணங்கி திருமலை நோக்கி தன் பயணத்தை தொடர்ந்தார்.

ஸ்ரீ இராமானுஜரின் சீடர்களில் அனந்தாழ்வான், ஆச்சாரியராகிய உடையவர் கட்டளையிட்டபடி, திருமலையில் நந்தவனம் அமைத்து, தொண்டுசெய்து வரும் நாளில் உடையவரின் சீடர்களில் ஒருவரான தொண்டனூர் நம்பி திருமாலடியார்களுக்கு இரவு பகலாக பெருவிருந்து அளித்து கொண்டிருந்தார். அவ்வாறு நடத்தி வரும் நாளில், தவத்தில் சிறந்த சிவனடியார் ஒருவர் மிகுந்த பசியுடன் தொண்டனூர் நம்பி வாழ்ந்துவரும் ஊரில் வந்து, அங்குள்ளவர் களிடம் "பசியினால் வருந்தினேன் : கஞ்சிக்கூழ் இருக்குமாயின் அளிப்பீராக" என வினவவும்.

"வருந்தினேன் பசியால் கஞ்சிக் கூழ்
உளதேல்
வாரும் என்(று) ஒருவனைக் கேட்பத்
திரிந்துநின் றவனும் தொண்டனூர்
நம்பி
திருமனை வாசலைக் காட்டி
அரும்பசி உடையாய் அத்திரு
மனையில்
அமுதுசெய்கின்றனர் ததியர்
மருங்கல் நீ நின்றங்(கு) எம்பெரு
மானார்
திருவடி சரணென வாக்கால்'

ஸ்ரீ ராமானுஜ வைபம் பாடல் *498*

அதில் ஒருவன் தொண்டனூர் நம்பி வீட்டினைக்காட்டி, திருமாலடியார்கள் அவ்வீட்டில் உணவு உண்ணுகின்றனர். நீரும் அங்கே சென்று "எம்பெருமானார் திருவடிகளே சரணம்" என வாயினால் சொல்வீராக அப்பொழுது சோறு கிடைக்கும் என அறிவுறுத்தினார். இதனை கேட்டு மனம் மகிழ்ந்த, அந்த சிவனடியார் திருமாலடியார்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் மாளிகைக்கு சென்று, கல்லும் கரையும் வண்ணம் ராமானுஜரின்

திருநாமத்தை சொன்னார்.

எம்பெருமானார் திருவடிகளை வணங்கி சொல்லும் திருநாமத்தினை கேட்ட, தொண்டனூர் நம்பி, வெளியே வந்து பார்க்கவும் நீண்ட சடையும், அரையில் கிழிந்த ஆடையும், உடம்பெல்லாம் பூசப்பெற்ற சாம்பலும், பசியால் வருந்திய முகமும் உடையவராய் நிற்கும் சிவனடியாரைக் கண்டார். சிவனடியாராக இருக்கும் நீர் எம்பெருமானார் திருநாமத்தை சொல்லுவதன் கருத்து என்ன என தொண்டனூர் நம்பி கேட்கவும், அதற்கு அந்த சிவனடியார் 'பசிமிகுதியால் வருந்துகிறேன் அதனை போக்கி கொள்ள சொன்னேன் என்றார். தொண்டனூர் நம்பி அந்த சிவனடியாரை ஓரிடத்தில் உட்கார வைத்து, திருமாலடியார்கள் சாப்பிட்ட மிச்சம் உள்ளது. இதனை ஏற்றுக்கொள்வீர் என சொல்லி உணவு அளித்தார். அந்த சிவனடியாரும் உணவினை உண்டு பசிதீர்ந்து மகிழ்ந்தார்.

இதனை கண்ட திருமாலடியார்கள் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தை கடைபிடித்து வரும் நாம் சாப்பிட்ட உணவின் மிச்சத்தை விரதம் ஏதும் இல்லாத சிவனடியார்க்கு அளித்து தவறு செய்துவிட்டீர் என கோபம் கொண்டனர். தொண்டனூர் நம்பி திருமாலடியார்களை வணங்கி நான் தவறு செய்துவிட்டேன் பொறுத்தருள்வீர் என வேண்டிக்கொண்டு, திருமாலடியார்களிடம் "எம்பெருமானார் திருநாமத்தை ஒருவன் சொன்னால் அவனுக்கு என்னபயன் கிட்டும்" என கேட்டார். திருமாலடியார்கள் எம்பெருமானார் திருநாமத்தை சொன்னவனுக்கு பரமபதம் கிடைக்கும் என்றார்கள். பரமபதமே அளிக்கும் எம்பெருமானார் திருநாமத்தை சொன்ன சிவனடியார்க்கு ஒருவேளை சோற்றை தான் அளித்தது தவறா' என தொண்டனூர் நம்பி கூறவும், திருமாலடியார்கள் சம்பிரதாயத்தை பின்பற்றாதவருக்கு உணவு அளிப்பது முறையல்ல என கூறினர்.

இவ்வாறு ஒருவருக்கு ஒருவர் தர்க்கமிடுவதை பார்த்த அந்த சிவனடியார் தொண்டனூர் நம்பியை நோக்கி, "திருமாலடியார்கள் உம்மை இகழ்ந்து பேசுவது ஏன்"? என வினவவும், தொண்டனூர் நம்பி உமக்கு உணவு அளித்ததால் என்னை இகழ்ந்து பேசுகிறார்கள்" என சிவனடியாரிடம் கூறவும், மிகவும் மனம் நொந்த சிவனடியார், தொண்டனூர் நம்பியை நோக்கி "இப்பொழுதே உமது அடியேனாகி விடுகிறேன் எனக் கூறி முடியினை சிரைத்துக்கொண்டு, கந்தல் ஆடையையும் வீசி எறிந்துவிட்டு ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் சேர்ந்து திருமாலடியாரில் ஒருவரானார்.

"அப்படித் தர்க்கம் இடுவதைப் புனித
மருந்திய தவசியும் கேட்டங்(கு)
ஒப்பிலா நம்பி தன்னொடும் உன்னை
உத்தமர் இகழல் என்னென்று
செப்பினான் நம்பி உனக்கவர் தளிகைச்
சேடமிட்டதன் பொருட்டென்றான்
தப்பற இன்றே நானுனக் காளாய்ச்
சமைவனிங்கெனத் தலைசிரைத்து".

ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் 504

தொண்டனூர் நம்பியும் மனம் மகிழ்ந்து, அவருக்கு பஞ்ச. ஸம்ஸ்காரம் செய்வித்தார். தொண்டனூர் நம்பிக்கு அடிமையான அந்த அடியார் "தேவரீர் அடியேன் செய்வதற்கு தொண்டினை அளித்திடுக" என கேட்கவும், எல்லையில்லாத பெருமையுடைய திருமாலடியார்கள் அமுது செய்தபின் தளிகை மாற்றுவது (இலையை எடுப்பது) உமது வேலையாகும் எனச் சொல்லவும் அதனை மகிழ்ச்சியோடு ஏற்று கொண்டார் திருமாலடியராக மாறிய சிவனடியார்.

இவ்வாறாக குருநாதர் உடையவரின் பெருமைகளை பறைசாற்றும் சீடர்களாக விளங்கிய அனந்தாழ்வான், தொண்டனூர் நம்பி மற்றும் சீடர்களை பார்க்க வேண்டும் என்று எண்ணம் கொண்ட உடையவர் அனந்தாழ்வான் தொண்டு செய்யும் திருமலை திருத்தலத்திற்கு தலயாத்திரை மேற்கொண்டார்.

–தொடரும்

உலகிலே பிறந்த உயிர்கள் அனைத்தும் பலப்பல எண்ணங்களுடன் வாழ்கின்றன. ஒரு தந்தைக்கு ஒரு தாய்வயிற்றில் இரு மக்கள் பிறந்தன. ஒன்று தாய் தந்தையருக்கு அடங்குகின்றது; ஒன்று அடக்குகின்றது. ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்கள் குணம் வேறு. நடைவேறு, திறம்வேறு, இவ்வாறு எல்லாவற்றிலுமே மாறுபாடுகளுடன் இருக்கின்றார்கள்.

இயல்புகளை உடையவர்கள். இராவணன் மூர்க்கன்; கும்பகர்ணன் நல்லவன். ஆனால் முரடன்; விபீஷணன் பரம சாது. விபீஷணர் என்ற பேர் சிவபெருமானுடைய ஆயிரம் நாமங்களில் ஒன்று. "பேராயிரம் பரவி வானோர் ஏத்து பெம்மானை" என்கின்றார் அப்பர் பெருமான். விபீஷணன் பயம் இல்லாதவன். எல்லோருக்கும் மரண பயம் உண்டு. சிவபெருமான் காலனை யுதைத்த காலகாலன். அவர் ஒருவர் தான் பயம்

துன்பம் துடைக்கும் வழி

"அருள்மொழியரசு" திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்



இல்லாதவர். சிவ சகஸ்ரநாமங்கள் மகாபாரதத்தில் அநுசாசன பர்வதத்திலே உபமந்யு முனிவர் கண்ணபிரானுக்கு உபதேசித்தார் என வருகின்றது.

அடுத்து சூர்ப்பணகை, சூர்ப்பம்-முறம். முறம்போன்ற நகங்களையுடையவள். இவள் கணவனைத் தொட்டால் எத்துணை இங்கிதமாக இருக்கும்? கணவனைத் தொட்டால் அவன் உடம்பில் உதிரம் ஒழுகும். இன்னும் ஒருமுறை மனைவி தன்னைத் தொடுவாளா என்று அவன் எதிர்பார்ப்பானா? எப்போது தொட்டு விடுவாளோ? என்று நடுங்கிக் கொண்டேயிருப்பான். சூர்ப்பணகையின் கணவன் வித்யுத் ஜிஹ்வா. வித்தையை நாவினால் யுத்தம் செய்து வென்றவன்.

சூர்ப்பணகை மிகவும் பொல்லாதவள். ஒரு வயிற்றில் பிறந்தவர்கள் இவ்வாறு

தாய் கேகசி; தந்தை விச்சிரவசு. இவர்கட்குப் பிறந்தவர்கள் இராவணன். கும்ப கர்ணன், விபீஷணன், சூர்ப்பணகை என்பவர்கள். இந்நால்வரும் வெவ்வேறு

குணங்களால் வேறுபடுகின்றார்கள். புகழ் பெற்ற இதிகாசத்தில் வரும் பாத்திரங்கள் இவர்கள். எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர்களைப் பற்றிக் கூறினால்

உங்களுக்கு நன்கு புரியும் என்று இதனைக் கூறினேன். ஆதலால், ஒருவர் குணம் போல், ஒருவர் குணம் அமையாது. ஆன்மாக்கள் வெவ்வேறு இயல்புகளுடன் இருக்கின்றன. அனால், இப்போது நான் சொல்லப்போகும் ஒன்றில் மட்டும் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. "துன்பம் இன்றி இன்பத்துடன் வாழ வேண்டும்" என்றுதான் கருத்து வேற்றுமையின்றி எல்லாரும் எண்ணுகின்றார்கள்.

ஆணோ,பெண்ணோ முதியவரோ இளைஞரோ, முந்தியிருந்தவரோ, இப்போது இருக்கின்றவரோ, இனி இருக்கப் போகின்றவரோ எல்லாரும் துன்பமின்றி இன்பத்துடன் வாழ வேண்டும். என்றுதான் எண்ணுகின்றார்கள். ஆனால் யாராவது துன்பமின்றி இன்பத்துடன் வாழ்கின்றார்களா? இல்லை. நமக்கு வரும் துன்பங்கள் ஒன்றா? இரண்டா? பலப்பல.

"பவ துன்ப முழுன்று கலங்கிய

சிறியன் புலையன் கொலையன் புரி

பலமின்று கழிந்திட வந்தருள் புரியாயே"

என்கின்றார் அருணகிரிநாதர். எள்வேண்டும் என்று கொள் விதைப்பது போலும், திருச்சி ரயில்வே நிலையத்தில் மதுரைக்கு டிக்கட்டு எடுத்து விழுப்புரம் போகும் ரயிலில் ஏறுவது போலும் இன்பம் வேண்டும் என்று எண்ணுகின்ற நாம், துன்ப விதைதூவுகின்றோம். துன்பவிதை தூவினால் இன்பம் எப்படி விளையும்.

ஒரு தாய்க்கு நான்கு புதல்வர்கள். ஆரோக்கியமான மூத்த புதல்வனுக்கு 3 இட்டிலி, 2 தோசை, ஒரு மலைப்பழம், ஒரு குவளை நிரம்பப் பால் தந்தாள். இரண்டாவது மகனுக்கு அரை உப்புப் போட்ட பார்லி கஞ்சி தந்தாள். அவனுக்கு ரத்த சீதபேதி. மூன்றாவது மகனுக்குப் புனல்பாகக் கஞ்சி தந்தாள். அவனுக்கு மாந்தம். நான்காவது கடைக்குட்டி மகனுக்கு ஒன்றுமே தரவில்லை; சட்டினிகூட இல்லை, பட்டினி. அவன் தாய்மீது சினந்து 'அம்மா ஒழிக!' என்றான். கருணை வடிவான தாய், அவனுக்கு ஏன் உணவு தரவில்லை? அவனுக்கு வயற்றில் சிக்கல்! நேர்வாளமும் விளக்கெண்ணெயும் தந்துள்ளது. 4,5 முறை பேதியான பிறகுதான் ரசமும் சோறும் தரவேண்டும்.

பாரபட்சமில்லாத அன்னை மக்களின் உடல் நிலைக்கு ஏற்ப உணவு தருகின்றாள். தாயின் கருணைமீது குறை கூறலாமா?

பள்ளியில் முதல்வர், மாணாக்கர்கள் எல்லோருக்கும் பாரபட்சமின்றி ஒரே மாதிரியாகவா மதிப்பெண் தருகின்றார்? அந்தந்த மாணவன் எழுதிய எழுத்துக்கு ஏற்ப மதிப்பெண் தருகின்றார். அதுதானே முறை. 'திருச்சிக்கு அருகிலே ஓடுகின்ற நதியின் பெயர் யாது? என்று கேள்வித்தாளில் இருந்தது. அதற்கு ஒரு மாணவன் "திருச்சிக்கு அருகில் ஓடுகின்ற நதி கூவம்" என்று எழுதினான். அவனுக்கு என்ன தருவார்? பூஜ்யம்தானே தருவார்'

இதுபோல் ஆனமாக்கள் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பச் சுக துக்கங்களை இறைவன் தருகின்றான். ஆதலால் துன்பத்தை நுகர்கின்றவர்கள் இறைவனை நோகலாமா? இறைவன் நடுநிலை வழுவாதவன். நாம் நுகர்கின்ற இன்ப துன்பத்திற்கு இறைவன் காரணம் அல்லன். நாம் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். இந்தக் கருத்தைப் பிரமதேவர். மற்றைத் தேவர்கட்கு அறிவிக்கின்றார்.

"இவறலும் இகலும் இன்றி

யார்க்குமோர் பெற்றித் தாகி

அவரவர் வினைகள் நாடி

அதற்படு பொருளை நல்கும்

சிவனையாம் வெறுத்தல் குற்றம்;

சிறந்தநோன் பியற்றி டாதே

தவறுசெய் தனம்என் றெம்மை

நோவதே தக்க தென்றார்"

–கந்தபுராணம்

ஆதலால் நாம் அனுபவிக்கின்ற துன்பங்களுக்குக் காரணம் இறைவன் அல்லன். நாம் முன்செய்த தீவினையே

காரணமாகும் ; நாம் முற்பிறப்பில் செய்த பாவங்களின் பயனை இப்போது நுகர்கின்றோம் என்று கருதிச் சமாதானமாக வினைப்பயனை அனுபவிக்க வேண்டும்.

"உற்றநோய் நோற்றல்;

உயிர்க் குறுகண் செய்யாமை

அற்றே தவத்திற் குரு"

என்கின்றார் திருவள்ளுவர், நோய்–துன்பம்: நோற்றல்–தாங்கிக் கொள்ளுதல். துன்பத்தைக் கண்டு துடிக்காமலும் துள்ளாமலும் அமைதியாக அனுபவிக்க வேண்டும்.

ஒருவர் நமக்குத் துன்பஞ் செய்வாராயின் அவர்கள் மீது சீற்றம் அடைதல் கூடாது. அவர்களை வெறுக்கவும் கூடாது. நான் செய்த வினை "ஆத்யான்மிகம்" என்ற நியதியின்படி இவர்கள் மூலம் துன்பம் வருகின்றது என எண்ணி மனம் சாந்தியடையவேண்டும்.

இதற்கு ஒரு உதாரணம் உரைக்கின்றேன். சீதாதேவியை அசோகவனத்தில் கொடிய அரக்கியர்கள் அல்லும் பகலும் அல்லல் படுத்தினார்கள். இராவணனை இராவணஞ் செய்து இராமர் வெற்றி மாலை சூடினார். அநுமார். சீதையிடம் வந்து வணங்கி, "அம்மா! இராமஜெயம்! இராவணன் மாண்டு விட்டான்.' என்று இயம்பினான். சீதாபிராட்டியாருக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று. 'மகனே! ஆஞ்சநேயா! உனக்கு முன்னே சிரஞ்சீவியாக இருக்க வரம் உதவினேன். இப்போது என்ன வரம் வேணுமோ கேள்' என்றாள். அநுமர், 'தாயே! நான் மூவாசையும் இல்லாதவன். எனக்கென்று ஒன்றும் தேவையில்லை. இந்தப் பத்து மாதங்களாகத் தேவரீரை வாட்டிவதைத்த இந்தக் கொடிய அரக்கியைத் தீயிட்டு கொளுத்தவேண்டும். ஆதலால் இவர்களை எரியிட்டு எரிக்கும் வரத்தை வழங்குமாறு வேண்டுகின்றேன்' என்று வரம் கேட்டார். மற்றவர்களாயின் 'நல்லது மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்து' என்று கூறியிருப்பார்கள். பரம ஞானியாகிய ஜனகர் பெற்ற அந்தச் சீதாதேவி அப்போது என்னகூறினாள்.

"அப்பா! அநுமானே! இந்த அரக்கியர் என்னைத் துன்புறுத்தவில்லை. நான் துன்பத்தைத் துய்ப்பதற்குக் காரணம் இவர்கள் அல்லர். என் வினைதான் காரணம். தவநெறியில் நின்ற என் கணவனாரை மான் பிடித்துக் கொடுங்கள் என்று மான் பின் அனுப்பினேன். அது பிழையல்லவா? என் அருகில் காவலாக இருந்த இலக்குவனை நிந்தனை செய்து போகச் செய்தேன். என் அருகில் இலக்குவன் இருந்திருந்தால், ஈராயிரம் இராவணர்கள் ஒருங்கே வந்தாலும் என்னைக் கவரமுடியுமா? முடியாது. உணவும் உறக்கமும் துறந்து, சுகத்தை மறந்து என்னைக் காத்து நின்ற பரம பக்தனாகிய இலக்.குவனை நான் கொடுஞ் சொற்களால் மனத்தை நோகவைத்து அனுப்பினேன். அந்த வினைப்பயனால் இந்த இடர் வந்தது.

செய்வான், செய்வினை, வினைப்பயன், சேர்ப்பான் என்ற இந்த நான்கு தன்மைகளை உணர்வதுவே உத்தம ஞானம். இராவணனுடைய ஏவலர்களாகிய இந்த அரக்கியர் தங்கள் எஜமான் இட்ட கட்டளைப்படி என்னை இடர்ப்படுத்தினார்கள். ஆதலால் இவர்களை நோகலாமா? என்னுடைய இல்லத்தில் இருந்த என்னுடைய உடையை உடுத்தி, என்னுடைய உணவை உண்ட கூனி எனக்குப் பெருந்துயர் விளைவைத் தந்தாள். அதனையே நான் பொறுத்து வந்தேன். அக்கூனியைவிடஇவர்கள் கொடியவர்களா? இல்லை. ஆகவே நடந்ததை இனி சிந்திக்கக்கூடாது" என்று அன்பும் அருளும் ஒழுக அறவுரை பகர்ந்தாள்.

"யானிழைத்த வினையினால் இவ்விடர்

தானடுத்தது தாயினும் அன்பினோய்

கூனியில் கொடியா ரலரே யிவர்'

போனகாரியம் எண்ணலை புந்தியோய்"

–கம்பராமாயணம்

ஆதலால் துன்பத்தை நுகர்கின்றவர்கள், கடவுளையோ மற்றவர்களையோ

நோகக்கூடாது. நம் வினையைத்தான் நோகவேண்டும். நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டும் என்றால் மற்றவர்க்கு மனவாக்குக் காயங்களால் துன்பம் செய்யக்கூடாது; நன்மையே செய்ய வேண்டும். இதுதான் பண்பாடு. துன்பம் வினையினால் விளைகின்றது: விதையில்லையேல் செடி கொடிகள் இல்லை; வேரின்றி மரம் இல்லை; பால் இல்லையேல் நெய்யில்லை; இதுபோல் வினையில்லையேல் துன்பம் இல்லை. துன்பங்கட்குக் காரணங்கள் வினைகள்தாம் என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும்.

வினை மூன்று வகைப்படும். ஒன்று செய்வினை. இது ஆகாமியம் எனப் பெயர்பெறும்; மற்றொன்று நுகர்வினை. இது பிராரப்தம் எனப் பெயர்பெறும்; மூன்றாவது தொல்வினை. இது சஞ்சிதம் எனப் பெயர் பெறும். பாவம் செய்யக் கூடாது; புண்ணியம் நிஷ்காம்யமாகச் செய்தல் வேண்டும். இதனால் செய்வினை மேலைக்கு வித்தாக வாராது. நுகர்வினை இந்த உடம்பு நுகர முடிந்து விடும். தொல்வினை ஞானத் தீயால் எரிந்து விடும். அன்றியும் நம்மை அகாரணமாக நிந்திக்கின்றவர்கள் பங்கிட்டுக் கொள்ளுகின்றார்கள். இந்த வகையில் ஆகாமியம் பிராரப்தம் சஞ்சிதம் என்ற வினைகளும் தொலையும் இதனால் பிறப்பு முடியும். துன்பம் தொடராது.

நாம் இறவாமல் இருக்க வேண்டும் என்றால், அதற்கு ஒரு வழியுண்டு அது யாது? இறவாமல் இருக்க வேண்டும் என்றால் பிறவாமல் இருக்க வேண்டும். நாம் எங்குச் சென்றாலும் நம் நிழல் நம்மைத் தொடர்ந்து வருகின்றது. நம் நிழலை நிறுத்த ஒரு வழியுண்டு. அது என்ன வழி? நாம் இன்னொரு நிழலுக்குச் செல்ல வேண்டும். நிழலுக்குச் சென்றால் நம் நிழல் நின்றுவிடும். இதுபோல் வினையில்லையானால் துன்பமேயில்லாதொழியும்.

"அல்லல் என்செயும்? அருவினை
என்செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தம்தான்
என் செயும்?
தில்லைமா நகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லையில்லா தோர் அடிமைபூண்
டேனுக்கே!"

"நன்று நாள்தொறும் நம்வினை
போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திருவேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத்
தொழுமினே"
–அப்பர்.

இந்தத் தெய்வத் திருமறை அமுதவாக்குகளை ஓர்க; உணர்க; உய்க. ஆதலால், அன்பர்கள். துன்பந்தொலைத்து, இன்பம் ஓங்கவேண்டும் என்று கருதுவீர்களானால், வினைபுரியாது, தினையளவேனும் இறைவனை மறவாது, அன்புநெறி நின்று, அருள் மயமாகிச் சிவசிந்தையுடன் இருங்கள்; அவநெறி அகன்று சிவநெறியில் செல்லுங்கள்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ. 10/-
ஓராண்டு சந்தா	ரூ. 120/-
ஐந்தாண்டு சந்தா	ரூ. 500/-
பத்து ஆண்டுச் சந்தா	ரூ. 1000/-
ஆயுட்காலச் சந்தா	ரூ. 1500/-

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ. 15,000/-
2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்)	ரூ. 10,000/-
3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்)	ரூ. 7,500/-
4.உட்புறம் முழுப்பக்கம்	ரூ. 5,000/-
5.உட்புறம் அரைப்பக்கம்	ரூ. 3,000/-

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

சிறுத்தொண்டரின் திருத்தொண்டு

தென்னாடுடைய சிவபெருமான் மீது அன்பு கொண்டு அவ் அன்பின் வெளிப்பாடாக பல்வேறு தொண்டுகள் செய்தும், பாடிப் பரவியும், சிவபெருமானின் பல்வேறு சோதனைகளுக்கு ஆட்பட்டும், தாம் கொண்ட குறிக்கோளில் வழுவாது நின்று இறையருள் பெற்றவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள். இவ் அறுபத்து மூவரில் செயற்கரிய செயல் செய்த சிறுத்தொண்டருடைய செயல் சாதாரண மனித நிலையில் நினைக்கக்கூட முடியாத அரிய செயலாகும்.

சோழநாட்டில் சிறப்புமிக்க திருச்செங்காட்டங்குடியில் மாமத்திரர் குலத்தில் சிறுத்தொண்ட நாயனார் தோன்றினார்.அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் 'பரஞ்சோதியார்' என்பது. அவர் பல்வேறு கலைகளில் சிறந்து விளங்கினார். குறிப்பாக படைக்கலப் (போர்) பயிற்சியில் சிறந்து விளங்கியதால் இராஜசிம்மன் என்ற பல்லவ மன்னனிடம் படைத்தலைவராகப் பணியாற்றினார். பல்லவ நாட்டின் மீது படையெடுத்து வந்த சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசி என்றழைக்கப்பெறும் விக்கிரமாதித்தனைத் துரத்திக் கொண்டு சென்று, அவன் தலைநகராகிய வாதாபியை அழித்தவர். அவர் பெற்ற வெற்றிக்குக் காரணம், சிவபெருமான்மீது அவர் கொண்டிருந்த பற்றே என்பதை உணர்ந்த பல்லவ அரசன், அவரைப் பிறந்த ஊருக்கு அனுப்பி, அவருக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து, விருப்பம்போல் வாழவைத்தான். பரஞ்சோதியார் 'திருவெண்காட்டு நங்கை' என்ற மனைவியுடனும், சீராளன் என்ற மகனுடனும் இனிதே இல்லறம் நடத்தி வந்தார்.

நாள்தோறும் சிவனடியார் ஒருவருக்கு அவர் விரும்பி கேட்கும் உணவை அளித்த பின்னரே தாம் உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். இதனால், இவர் 'சிறுத்தொண்டர்' என்று வழங்கப்பெற்றார்.

சிறுத்தொண்டரின் பெருமையை உலகுக்கு அறிவிக்க வேண்டி சிவபெருமான் வடநாட்டு பைராகி வேடங்கொண்டு திருச்செங்காட்டங்குடி வந்து சேர்ந்தார். அன்றைய தினம், சிறுத்தொண்டரின் இல்லம் நாடி சிவனடியார் யாரும் வராததால் அடியாரைத் தேடி அழைத்து வரும் பொருட்டு சிறுத்தொண்டர் வெளியில் சென்றிருந்தார். அப்போது சிறுத்தொண்டரின் வீட்டுக்கு வந்தார் பைராகி. அங்கு சிறுத்தொண்டர் இல்லாததை அறிந்து, பெண்கள் மட்டும் தனியாக இருக்குமிடத்தில் தாம் இருக்கலாகாது என்று கூறி அருகிலுள்ள கணபதீச்சுரம் என்ற ஊரிலுள்ள அத்திமரத்தின் கீழ் சென்றமர்வதாகக் கூறிச் சென்றார். அடியார் எவரும் தென்படாத நிலையில் கவலையுடன் வீடு திரும்பிய சிறுத்தொண்டர், பைராகி ஒருவர் வந்ததையறிந்து பெருமகிழ்வு கொண்டு, உடனே சென்று அவரை சந்தித்து அவரது திருவடிகளை வணங்கி நின்றார். வணங்கி நின்ற சிறுத்தொண்டரைப் பார்த்து, 'நீரோ பெரிய சிறுத்தொண்டர்' என கேட்கிறார் பைராகி. சிவனடியார்களால் தாம் அவ்வாறு குறிப்பிடப்படுவதாக கூறிய சிறுத்தொண்டர், தம் இல்லத்தில் வந்து உணவருந்திச் செல்ல வேண்டும் என்று வேண்டுகிறார். தமக்கு வேண்டிய உணவை அளிப்பது அரிதானது என்று கூறிய பைராகிக்கு, இறைவனின் அடியார்களுக்கு உணவளிக்கும் பொருட்டு 'அரியது இல்லை' என்று சிறுத்தொண்டர் உறுதியளிக்கிறார். சிறுத்தொண்டரின் வேண்டுகோளுக்கிணங்க தாம் உண்ணும் முறையைப் பற்றிக் கூறலானார். "ஆறுமாதங்களுக்கு ஒரு முறைதான் உண்போம். நாம் உண்பது பசுவாகும். அங்ஙனம் உண்பதற்குரிய நாளும் இன்றேயாகும். ஆனால், அவ்வாறு உண்பித்தல் உமக்கு அருமையுடையதாகும்" என்று மொழிந்தார்.

முனைவர்.இர.தர்மாம்பாள், எம்.ஏ,பிஎச்.டி..

அதைக்கேட்ட சிறுத்தொண்டர் "மிகவும் நல்லது. நான் ஆடு. எருமை. பசு என்ற மூன்று நிரைகளையும் பெற்றிருக்கிறேன். எனக்கு இங்குக் குறைவில்லை. உமக்கு அமுதம் ஆகின்ற அந்தப்பசுதான் இன்னது என்று தாங்கள் கூறியருள் செய்தால், அடியேன் விரைவாகச் சென்று உணவு சமைத்து உணவுக்குரிய காலம் தவறாது வருவேன்" எனக் கூறி கை தொழுதார். இதைக் கேட்டதும், 'நாம் உண்பதற்குக் கொல்லப்படுகின்ற பசுவும் நரப் (மானிடப்) பசுவாகும்' என்று கூறிய பைராகி நரப் பசுவினை உணவாக்குதற்கு தகுதியாக ஒன்பது நிபந்தனைகளைக் கூறகிறார். அவை, 1, நாம் பசு உண்போம் 2, நாம் உண்ணும் பசு நரப்பசுவாகும். 3,அப்பசு ஐந்து வயதுக்குள்ளாக இருத்தல் வேண்டும். 4, உடல் உறுப்புகளில் எவ்விதக் குறைபாடும் இருத்தல் கூடாது. 5, நல்ல குடியில் பிறந்த ஒரே மகனாக இருத்தல் வேண்டும். 6, அந்தப் பசுவை தாய் பிடித்துக் கொள்ள வேண்டும். 7, தந்தை அரிய வேண்டும். 8, இந்நிகழ்ச்சி நடைபெறும்பொழுது இந்த மூன்று திறத்தாரும் (தாய், தந்தை, மகன்) மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். 9, அப்படி அரியப்பட்ட பிள்ளைக் கறியை சமைக்கும் பொழுது மனதில் குழப்பமோ, வருத்தமோ இன்றிச் செம்மையாகக் கறி சமைக்க வேண்டும் என்பதாகும்.

பைராகியின் நிபந்தனையை கேட்டு மகிழ்ந்த சிறுத்தொண்டர் தம் மனைவி திருவெண்காட்டு நங்கையிடம் தெரிவிக்கின்றார். பணம் கொடுத்து யாரேனும் பெற்ற பிள்ளையைப் பெற்று அடியாரான பைராகிக்கு உணவளிக்கலாம் என்று சிறுத்தொண்டரின் மனத்தில் எழுந்து எண்ணத்தை பைராகியின் பின்னைய ஐந்து நிபந்தனைகளும் உடைத்தெறிந்தன.

இங்கே தான் சிவபெருமானின் சோதனையை நாம் உற்றுக் காணவேண்டும். சிறுத்தொண்டர், பரஞ்சோதியாக இருந்தபோது நாட்டைக் காத்தலே குறிக்கோள், பகைவரைக் கொல்லுதல் கடமை என வாழ்ந்தவர்.

போர்க்களத்தில் நாட்டை பாதுகாக்க வேண்டி பிற (எதிரி) நாட்டு படைகளை கொன்றவருக்கு இப்போது தன் மகனையே கொன்று கறி சமைக்க வேண்டிய சோதனை கடமையாக கண் முன்னே நிற்கிறது.

அடியார் விரும்பி கேட்ட பின்னர், அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டி நிறைய பொருள் கொடுத்தால் பிள்ளையை விற்பதற்கு முன்வருவர்; ஆனால் அப்பிள்ளையை தாயும் தந்தையும் தாமே அரிந்து கறிசமைக்க யாரும் ஒப்பமாட்டார்கள் என்பதையுணர்ந்த சிறுத்தொண்டர் தம் மகனையே அரிந்து கறிசமைக்க முடிவெடுத்து, மனைவியிடம் கூறுகிறார்.

சிறுத்தொண்டரின் தொண்டிற்கு உறுதுணையாக வாழ்ந்த திருவெண்காட்டு நங்கையும் அதனை ஏற்றார். பள்ளிக்குச் சென்றிருந்த தம் மைந்தனை சிறுத்தொண்டர் அழைத்து வருகிறார். வீட்டிற்கு வந்த மைந்தனின் தலைமுடியை ஒதுக்கி, முகத்தை துடைத்து, கடுக்கனிலும் அரைஞாணிலும் படிந்திருந்த தூசியைப் போக்கி, அணிந்த கலவைச்சாறு அழிந்ததற்கு வருந்தி, கண்ணில் அணிந்த மையினையும் கண்ணில் படாமல் ஒழுங்காக பக்கத்தில் நிற்குமாறு ஒதுக்கி, அன்புடன் எடுத்து நீராட்டிக் குறைவிலா அழகுபடுத்தி கணவரான சிறுத்தொண்டரின் கையிலே மகனை கொடுத்தார் திருவெண் காட்டு நங்கை. மைந்தனை மறைவிடம் கொண்டு சென்றார் சிறுத்தொண்டர் மைந்தனை அரியும் கறியை வைப்பதற்காக பாத்திரங்களை நன்றாகக் கழுவி எடுத்துச் சென்றார் திருவெண்காட்டு நங்கை.

தந்தையான சிறுத்தொண்டர் தலையைப் பிடித்துக் கொள்ள, தாயார் நங்கையார் மைந்தனின் கால்களிரண்டையும் மடியின் இடையே இடுக்கிக் கொண்டு. கொவ்வைக் கனியைப் போன்ற சிவந்த வாயையுடைய மகனின் கைகள் இரண்டையும் கையால் பிடித்துக்கொள்ள, மைந்தனும் தம் பெற்றோர் மிகவும் பெருமகிழ்ச்சி அடைகின்றார்கள் என்று மகிழ்ந்து நகைக்க, ஒப்பில்லா பெருமையுடை மகனாரைத் தந்தையான சிறுத்தொண்டர் வாளால் தலையை அரியலானார்.

மகனை அரிந்ததும் தாய், தந்தை இருவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். அறுத்து எடுத்த தலையின் இறைச்சி உணவுக்கு ஆகாது என ஒதுக்கி, அதை மறைத்து வைக்குமாறு 'சந்தனத்தாதி' என்ற பணிப்பெண்ணிடம் கொடுத்தனர். மற்ற உறுப்புக்களின் இறைச்சி எல்லாவற்றையும் கொத்தியும், அறுத்தும் எலும்பினுள்ளே உள்ள மூளையைத் திறந்து எடுத்து இட்டும்.

கறியாக்குவதற்குரிய பலவகை காய் வகைகளை அமைத்து சமைத்தனர்.

சமைத்தவற்றை இலைகளில் இட்டு வைத்து உண்பதற்காக பைராகியை அழைக்கின்றனர். பைராகியும் அங்கு வந்து மைந்தனின் உறுப்புகள் எல்லாவற்றையும் சமைத்தீரா எனக்கேட்கிறார், 'தலை இறைச்சி உண்பதற்கு ஆகாது என்று சமைக்கவில்லை' என்று கூறுகின்றனர். "அதனையும் யாம் உண்போம்" என்கிறார் பைராகி. "கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்" என்பது போல், சிறுத்தொண்டரின் இல்லப்பணிபெண்ணான சந்தனத்தாதியார், அடியார் அதனையும் கேட்பார் என நினைத்து தானே சமைத்து வைத்திருப்பதாகக் கூறுகிறார். இதனைக் கேட்ட சிறுத்தொண்டரும், நங்கையாரும் முகம் மலர்ந்தனர். தலை இறைச்சியையும் பரிமாறிய பின்பு பைராகியை உணவருந்த வேண்டுகின்றனர்.இப்போது, "தனித்து உண்ண எமக்கு இயலாது, சிவனடியார் எவரேனும் அருகில் இருந்தால் அழைத்து வருவீராக" என்று பைராகி ஆணையிடுகிறார். அதற்கிணங்க. இல்லத்தின் வெளியே போய்த் தேடியும் அடியார் எவரையும் காணாமல் வாட்டமுடன் வருகிறார் சிறுத்தொண்டர். அவருடைய வாட்டத்தைக் கண்ட பைராகி, அவரையே உடன் உண்ண வேண்டுகிறார். நங்கையாரை நோக்கி, தமக்கு பரிமாறியது போக மீதம் உள்ள இறைச்சியை சிறுத்தொண்டருக்கு இடும்படி வேண்டுகிறார். நங்கையாரும் அவ்வாறே செய்தார். பைராகியை உண்ணச் செய்யும் பொருட்டு, அடியாரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்றெண்ணிய சிறுத்தொண்டர் உண்ண முற்பட்டார். அப்போது அதனை தடுத்து, "ஆறுமாதத்திற்கு ஒரு முறையாம் உண்போம், நீவிர் ஒவ்வொரு நாளும் உண்பீர், அவ்வாறிருந்தும் நாம் உண்பதற்குள் நீவிர் உண்ணப் புகந்ததற்கு காரணம் யாது? நம்முடன் உண்பதற்கு உன் மகன் இருந்தால் அவனை இப்போது அழையும்" என்று கூற, 'அவன் இப்போது இங்கு உதவமாட்டான்' என்று சிறுத்தொண்டர் கூறுகிறார். அதற்கு அவன் இங்கு வந்தால்தான் நாம் உண்ண முடியும் அவனை அழையுங்கள் என்று ஆணையிட, சிறுத்தொண்டரும், நங்கையாரும் வீட்டின் வெளியே சென்று மகனை அழைக்கலாயினர். சிறுத்தொண்டர், "மகனே சீராளா! வா" என அழைத்தார். நங்கையாரும், சிவந்த மணியே! சீராளா! சிவனடியார் நாம் உய்யும்படி உடன் உண்பதற்கு அழைக்கின்றார் வா! என அழைத்து ஓலமிட்டார்.

"மகனை அரிந்து கறிசமைத்துவிட்டோம், இனி மகன் எங்கிருந்து வருவான்" என்றெல்லாம் நினையாமல். பைராகியை உண்பிக்கச் செய்யவேண்டிய தம் குறிக்கோள் ஒன்றினையே பற்றாகக் கொண்டு சிறுத்தொண்டர் செயல்படுகிறார். என்னே இறைவனின் அற்புதக் கருணை! பெற்றோரின் குரல் கேட்டு பள்ளியிலிருந்து ஓடிவருபவரைப் போல ஓடிவந்த மகனை அள்ளியெடுத்து தழுவிக் கொண்டு கணவனின் கையில் கொடுத்து "இறைவனின் தொண்டர் உணவு உண்ணப் பெறும் பேற்றைப் பெற்றோம்" என்று மகிழ்கின்றனர்.

மகனை அழைத்துக் கொண்டு வீட்டினுள்ளே வருகின்றனர். அங்கே பைராகியைக் காணவில்லை. அவரைக் காணாமல் உள்ளம் கலங்கித் திகைப்படைந்தார்; விழுந்தார்; உள்ளம் அழலப் பெற்றார்; வெந்த இறைச்சிக் கறியையும் பரிமாறப்பட்ட இடத்தில் காணாதவராய்த் திடுக்கிட்டார்.

"சிவந்த மேனியும், கரிய முடியும், செழிய போர்வையும் கொண்ட (வயிரவர்) பைராகி நாம் உய்யும் படி உணவு உண்ணாமல் எங்கே ஒளிந்தார்" என்று தேடியவர் வெளியே வருகிறார். அங்கு, மறைந்தருளிய பைராகியான சிவபெருமான் உமையம்மையாருடனும், முருகப்பெருமானுடனும் காட்சியளிக்கிறார்.

சிறுத்தொண்டரின் தொண்டும், குறிக்கோளும் தன்னலமற்றவை. பிள்ளைக்கறியை வேண்டி, விரும்பிக் கேட்கும் போது, தன் பிள்ளையாயிற்றே என்று தன்னலம் பார்க்காமல், அடியவரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும், அவரை உண்பிக்கச் செய்யவேண்டும் என்ற தொண்டுமனப் பான்மையும், குறிக்கோள் வாழ்க்கையும் சிறுத்தொண்டரை தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது. தன்னலம் இன்றி செயல்பட்டால் வாழ்வில் உயரலாம் என்பதற்கு சிறுத் தொண்டரின் வரலாறு சான்றாக அமைகிறது.

இதன் காரணமாகவே சிறுத்தொண்டரின் தொண்டு 'திருத்தொண்டு' எனலாயிற்று, 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!'

திருவரங்கனும் சேரலர் கோனும்

மெய்யில் வாழ்க்கை

குலசேகராழ்வார் யாக்கை நிலையானது அல்ல என்பதை உணர்ந்து, இவ்வுடல் பொய்யுடை வாழ்க்கை என்று புலப்படுத்துகின்றார். மின்னல் ஒரு கணத்தில் தோன்றி மறைவதைப் போல நமது யாக்கையாகிய உடலின்றும் உயிர் பிரிந்து, உடலைப் பயனற்ற தாக்கிவிடும். இதனையே,

"மின்னின் நிலையில மன்னுயிர் யாக்கைகள்'

என்றார்நம்மாழ்வார். (திருவாய்மொழி1–22)

திருவள்ளுவரும், நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் பெருமையை உடையது இவ்வுடல் என்றும், இராப்பொழுதில் தூங்குகின்றபோதே உயிர் உடலை விட்டுப் பிரியக்கூடியது என்றும் கூறுகின்றார்.

"உறங்குவது போலும் சாக்காடு'

(திருக்குறள்–339)

நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை
என்னும் பெருமை படைத்து இவ்வுலகு.

(திருக்குறள்–336)

இதனைச் சான்றோரும் பின் வருமாறு பாடியுள்ளனர்.

"தூங்குகின்றபோது வாங்குகின்ற மூச்சு சுழிமாறிப் போனாலும் போச்சு"

இந்த வாழ்க்கை என்று முடியும் என்பது யாராலும் உறுதியாகக் கூற முடியாது. இந்த உயிர் வாழ்க்கைக்கு இறுதி. **"ஆறிலும் உண்டு. நூறிலும் உண்டு,"** என்றனர்.

மூங்கில் இலை மீது தூங்கும் பனி நீரைப் போலவும், வெள்ளத்தில் மிதந்து செல்லும் நீர்க்குமிழி போலவும், கண நேரத்தில் மறைந்து போகக்கூடியது

'புல் நுனி மேல் நீர் போல்"

(நாலடியார்–29)

"நீர்க்கோலவாழ்வு"

(கம்பராமாயணம்)

இவ்வுலகில் பிறந்தவர் என்றாவது ஒரு நாள் இறந்தே போவர். இதுதான் உலக நியதி.



"சாவாதது இல்லை பிறந்த உயிர்களும் மெய்யில் வாழ்க்கை'

(நான்மணிக்கடிகை–77)

இப்படி நிலையில்லாத பொய் வாழ்வை, நிலையான மெய் வாழ்க்கை என நினைத்து, மயக்கமாகிய அறியாமையால் துன்பமடையும் இவ்வுலக மக்களோடு இனியான் சேரப் போவது இல்லை. ஏனெனில், மெய்யான வாழ்க்கையாகிய பரமபத வாழ்வினை எனக்கு அளிக்கக்கூடியவன் திருவரங்கனே.

எனவே, திருவரங்கன்தான் நமக்குத்

தலைவன் என்று உணர்ந்து "ஐயனே! அரங்கா! என்று கூப்பிட்டு அவன் நாமத்தைச் சொல்லி மகிழ்கின்றேன். அவனும் என் மீது பற்று வைத்துள்ளான். ஆகையால் அடியேன் திருவரங்கன் மீது ஆராத பக்தி கொண்டுள்ளேன்.

"மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
வையம் தன்னொடும் கூடுவதில்லை யான்
ஐயனே! அரங்கா! என்றழைக்கின்றேன்.
மையல் கொண்டு ஒழிந்தேன் என்றன் மாலுக்கே"
(பெருமாள் திருமொழி–3–1)

உலகியலோடு ஒன்றாத தம் உள்ள நிலையை உள்ளவாறு உணர்த்துகின்றது இப்பதிகம்.

2. நூலினேர் இடையார்

இப்பாசுரத்தில், பெண்ணாசை கொண்டு அவர்களுடன் கூடி உடல் இன்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்வது தவறு என்பதையும், அவர்களுடன் கூடி வாழ்ந்து, பகவத் – பகவத – ஆசார்யத் தொண்டுகளை ஆற்றுவதே சிறந்தது, அதற்காகவே பெண்கள் வாழ்க்கைத் துணைவிகளாக விளங்க வேண்டு மென்பதையும் உள்ளுறைப் பொருளாகக் காட்டுகின்றார்.

பெண்களின் இடை சிறுத்து இருக்க வேண்டுமென்பது

உடல் உறுப்புகளின் தன்மை கூறும் "சாமுத்திரிகா லட்சணம்" கூறுகின்றது. அதுமட்டுமல்ல அப்படி இடை சிறுத்து இருந்தால் பெண்கள் அழகுடன் காணப் படுவர் என்றும் கூறுகின்றன அந்நூல்கள். இவற்றை சிருமருங்குல், மெல்லிடை, நாளன் நேர் இடை என்றெல்லாம் வருணிக்கப் பட்டுள்ளது. இத்தகைய உடலழகுடைய பெண்களிடம் பெறும் சிற்றின்பத்தை மட்டுமே பெரிதாகக் கொண்டு அவர்களிடம் உறவு கொள்வது தீமைகளையே விளைவிக்கும் என்று கீழ்க்காணும் பாசுரங்கள் கூறுகின்றன.

"நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்"
(கண்ணிநுண் சிறுத்தாம்பு–5)

"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் கூடி'
கூடினேன் கூடி இளையவர் (பொதுப் பெண்டிர்) தம்மொடு
அவர் தரும் கலவியே கருதியே'
(பெரிய திருமொழி –1–1–1)

மாதரார் கயற்கண் என்னும் வலையில்
பட்டு அழுந்து வேளை"
(திருமாலை–16)

"தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும்
நோயேன் பட்டொழிந்தேன்'
(பெரிய திருமொழி 1–9–1)

'ஊனிலா முறுவல், சிறுதல் மாதரார் வளமுலைப்
பயனே பேணினேன்'
(பெரிய திருமொழி 1–7–1)

"மானேய் கண்மடவார் மயக்கில் பட்டு மாநிலத்தில்
நானே நானாவித நரகும் புகும்பாவம் செய்தேன்'
(பெரியதிருமொழி 1–10–2)

இப்படி பெண்களின் அழகில் ஈடுபட்டு அவர் தரும் சிற்றின்பத்தையே பெரிதும் விரும்பி, வேறொன்றிலும் ஈடுபடாது வாழும் மக்களுடன் நான் கூடப் போவது இல்லை. ஏனெனில் அச்சிற்றின்பம் கள் ஆகிய மதுவைக் காட்டிலும் மனதை மயக்கவல்லது.

இனி யான் சிற்றின்ப வாழ்வை நீத்து, திருவரங்கன் திருமுற்றத்தில் அவன் திருநாமத்தைப் பாடியும், ஆடியும், திருவரங்கா என்று அழைத்தும் திருவரங்கன் மீது பெரும் பக்தி கொண்டு விட்டேன். அவனும் என் மீது அருள் சுரந்து ஆட்கொண்டு விட்டான்.

நூலின்நேர் இடையார் திறத்தே நிற்கும்
ஞாலம் தன்னொடும் கூடுவது இல்லை யான்
ஆலியா! அழையா! அரங்கா! என்று
மால் எழுந்து ஒழிந்தேன் என்றன் மாலுக்கே"
(பெருமாள் திருமொழி –3–2)

–தொடரும்

–முனைவர் ஏ.பரந்தாமன்
எம்.ஏ., பிஎச்டி

கருவூர் அருள்மிகு கல்யாண பசுபதீசுவர சுவாமி திருக்கோயில்

தலவரலாறு

கயிலை – மந்திரம் – காசி – காஞ்சி – பிரயாகை – நைமிசாரண்யம் – சேது – வஞ்சுளாரண்யம் எனும் சிவத்தலங்கள் மிகச் சிறந்தன. வஞ்சுளாரண்யம் எனும் கருவையில் ஒன்பது நாள் வழிபட்டு பூசித்தோர் மற்ற ஏழு தலங்களையும் வழிபட்ட பலன் அடைவர்.

(இது சூதக முனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்குச் சொன்னது. அத்தகையப் புகழ் பெற்ற சிவத்தலம் கருவூர்.

இத்திருத்தலமானது முக்கிய ஊர்களின் மையமாக உள்ளது.

கிழக்கே 76 கி.மீ., தொலைவில் திருச்சிராப் பள்ளியும், மேற்கே 113 கி.மீ., தொலைவில் கோயம்புத்தூரும், வடக்கே 100 கி.மீ., தொலைவில் சேலமும், தெற்கே 144 கி.மீ., தொலைவில் மதுரையும் உள்ளன.

புராணங்களின் அடிப்படையில் பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுப்படுவதை நோக்குங்கால் இதன் தலவரலாறு அறிவிற்கெட்டாத ஒன்றாக உள்ளது.

எப்படியிருப்பினும் சேர, சோழ, பாண்டியர்களால் இக்கோவில் அடிக்கடி சீர்த்திருத்தப் பெற்று, தங்கள் கால கட்டிடக் கலையை சிறப்பித்திருக்கின்றனர் என்பது புலனாகின்றது. மூர்த்தி – தலம் – தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களையும் உள்ளடக்கியுள்ளதாக இத்தலம் உள்ளது.

இத்தலத்தே வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆனிலையப்பர் என்று அழைக்கப்பெறும் பசுபதிநாதரின் ஆலய சிறப்புகளைப் பார்ப்போம்.

மூர்த்திச் சிறப்பு

இங்கு உள்ள ஆனிலையெனும் இலிங்க வடிவமானது முற்றிலும் சுயம்பு மூர்த்தியாகும். புற்றிடங்கொண்ட ஈசரை முதலில் வழிபடும் பெருமை பெற்றவராக பிரம்மதேவர் குறிப்பிடப்படுகின்றார். அதன்பின் காமதேனு துவங்கி விபண்டகன் வரை வழிபட்டதாக கூறப்படுகிறது.

சுயம்பு லிங்கமானது வடபுறம் சிறிது சாய்ந்தாற்போல் உள்ளது. இதற்கு பல காரணங்கள் கூறப்படினும் ஏற்றுக் கொள்ளப்படுபவை இரண்டே.

கதிரவனின் கதிர் வழிபாட்டை பங்குனியில் ஏற்றுக் கொள்வதாக ஒன்று.

தை பூசத்தன்று தன்னுள்ளே ஐக்கியமான

சித்தர் கருவூராரை தனக்கு இடப்புறத்தே அமர்த்தியமையால் என்பது மற்றொன்று.

காமதேனு வழிபடும்போது குளம்பு சிவலிங்கத்தின் மீது பட்டதால் ஏற்பட்ட குழிவான தழும்பு வடிவம் உள்ளது.

ஆ – நிலை என்பது பகவானைக் காமதேனு வழிபட்டதாகவும் கொள்ளலாம்.

ஆன்மாக்கள் நிலைகொள்ளும் இடம் என்றும் கொள்ளலாம். (ஆ என்பது உயிர்களைக் குறிக்கும்)

அலங்காரவதி – அலங்காரவல்லி எனும் கிருபாநாயகி

ஆனிலையப்பரின் மூத்த ஆதிசக்தியாக இங்கு கிருபாநாயகி காட்சி தருகின்றார். கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள் தரும் கிருபாநாயகியின் திருவடியின் கீழ் ஸ்ரீ சக்கர பீடம் பிரதிஷ்டை உள்ளது.

அருள்மிகு அலங்காரவல்லி அம்பாள்

அமாவாசை – பௌர்ணமி – அஷ்டமி ஆகிய நாட்கள் சந்திரனின் ஈர்ப்பு சக்தி உள்ளவையாகக் கருதப்படுகின்றன. சந்திர மண்டலத்துள் அம்பிகை அமர்ந்திருப்பதாக லலிதா சகஸ்ரநாமமும் கூறுவதால் மேற்படி நாட்கள் அம்மன் வழிபாட்டிற்கு உகந்தவையாகத் திகழ்கின்றன.

மேலும் தவப் பயனும் சிவார்ச்சனையுமே சிறந்தது என்பதை உணர்த்த கிருபா நாயகி எனும் உமையவள், கலைமகள், அலைமகளுடன் கயிலையிலிருந்து வஞ்சிவனம் வந்து ஆந்பொருணை எனும் அமராவதியில் நீராடி, நாள்தோறும் சிவார்ச்சனை செய்து பசுபதியீசனை வழிபட்டதாக அலங்காரவதிச் சருக்கம் கூறுகின்றன.

தனது தவப் பயனால் ஈசனை மணந்த ஒரு மானுடப் பெண். சௌந்திர நாயகியின் ஆலயம் வடபுறத்தில் தெற்கு நோக்கியவாறு அமையப் பெற்றுள்ளது.

கல்யாண பசுபதீசுவரர் ஆலயத்தின் மேற்கில் மயில் வாகனமேறிய நிலையில் ஆறுமுகப் பெருமான் சந்நிதி உள்ளது. வள்ளி தெய்வானை ஆகிய இருவரும் தனித் தனியே உள்ளனர்.

வராககிரி

சூதுபுராணிகர், (சனகாதி) முனிவர்களது வேண்டுகோளுக்கிணங்க கருவூர்த் தலச் சிறப்பினைச் சொல்லுமிடத்து, கொங்கேழு சிவத்தலங்களையும் தென்புறத்தே வராககிரி என்னும் மலையும் இருப்பதைக் குறிப்பிடுகின்றார்.

இவ் வராககிரியே தற்போது பன்றிமலை என்றழைக்கப்படுகிறது. அமராவதி நதியின் துவக்கம் ஆதியில் இம்மலையிருந்ததாகத் தெரிய வருகின்றது)

ஆம்பிராவதி எனும் அமராவதி

மலை வளம் குறைந்து மண்ணுயிர்கள் வாடியபோது, சிவபெருமான் உமையை அழைத்து, உமையின் அருளால் வராககிரியிலிருந்து நதியாகத் தோன்றுறச் செய்யுமாறு கூறினார்.

அம்மையின் திருவருளே நதியாக உருவெடுத்ததால் அம்பாநதி என்றும், முனிவர்கள் மரங்களாக மாறி தவமியற்றி நிற்க, அந்நிழலில் வருவதனால் ஆம்பிரமா நதி என்றும், காமதேனுவானது கருவூரை அடைவதற்கு முன் இருமருங்கிலுமுள்ள பல திருத்தலங்களை வழிபட்டமையால் பொருணை என்றும் இந்நதி அழைக்கப்பெற்று பின் மருவி அமராவதியாயிற்று.

காமதேனு பூசித்தல்:

காமதேனு தவம் செய்ய வஞ்சிவனம் வந்து அங்கே ஆதிலிங்கம் கண்டு தன் மடியிலிருந்த பாலைச் சொரிந்து தினமும் வழிபாடு செய்து வருகையில், ஒரு நாள் அதன் குழம்பு இறைவனின் திருமுடியில் இடப்பாகத்தில் பட்டுவிடவே, அதிலிருந்து இரத்தம் சொரிய ஆரம்பித்தது.

அதைக் கண்ணுற்ற காமதேனு மனம்

வருந்தி பதைபதைத்தது. அப்போது இறைவன் தோன்றி காமதேனுவே! நீ வருந்தாதே! இது உன் பிழையன்று. எமது திருவிளையாடலே! நீ நம்மை வழிப்பட்டமையால், பசுபதிநாதர் என்ற பெயரால் என்னை புவனங்கள் மூன்றும் போற்றக் கடவன.

இவ்விடத்திற்குத் தென்திசையில் சராசரங்களின் அடிச்சுவடுகள் வைக்கப் பட்டுள்ளன. பிரம்மன் தனது இயலாமையில் ஏதும் செய்யாது நிற்பான். நீ அங்கு சென்று என்னை நினைத்தால், உன்னாலும் படைப்பு தொழில் செய்ய இயலும் என்றருளிவிட்டு மறைந்தார்.

காமதேனுவும் அவ்வாறே செய்ய சராசரங்கள் படைக்கப்பட்டன. தனது திருவுளம் இருப்பின் பிரம்மன் மட்டுமல்ல, ஒரு பசுவும் படைப்புத்தொழில் செய்யும் என்பதை உணர்த்தவே இத்திருவிளையாடல் நடத்தப்பெற்றது. பிறகு பிரம்மனிடம் படைப்புத் தொழிலை ஒப்படைத்துவிட்டு காமதேனுவிற்கு சுவர்க்கலோகம் சென்று வாழ்வாயாக என்று எம்பெருமான் வரமளித்தார்,

எறிபந்தர் – சிவகாமியாண்டார் –புகழ்ச்சோழர்

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்த புகழ்ச் சோழன் நிறை வசூலிக்க கருவூர் வந்தான். அவனது பட்டத்து யானை அமாரவதி ஆற்றில் நீராடி வெளியே வந்தபோது, எதிரே சிவகாமியாண்டார் என்ற சிவனடியார் பசுபதிநாதரை வணங்க கூடையில் பூக்கொண்டு சென்றார். இதையறியாத யானை பூக்கூடையை **தூக்கி எறிந்து அவரையும் பயமுறுத்தி நின்றது. சிவபூஜை தடைப்பட்டதை எண்ணி சிவகாமியாண்டார் மனங்கலங்கினார்.**

அடியார்களின் துயர் போக்குவதையே முழு நேரப்பணியாக கொண்டு, கருவூரில் வாழ்ந்துவந்த எறிபத்தர் இதனைக் கேள்விப்பட்டு உடனே அங்கு சென்றார். பட்டத்து யானையின் தும்பிக்கையை வெட்டி வீழ்த்தி, காவலர்களைக் கொன்றார்.

நடந்த சம்பவங்களை **அறிந்து வருத்தமடைந்த மன்னன் எறிபத்தரை சந்தித்தான். இத்தவறில் தனக்கும் பங்குண்டு என்பதால், தன்னையும் கொன்று விடுமாறு கேட்டுக்கொண்டார். இல்லையெனில் தானே தன் உயிரை மாய்த்துக் கொள்ளவும் துணிந்தான்.** மன்னனைத் தான் கொல்லாவிடில், மன்னன் தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என்றெண்ணிய எறிபத்தர், இத்துணை நல்லவருக்கு தீங்கு செய்து விட்டோம்! என்றெண்ணித் தன் தலையைத் தானே, மன்னரது உடைவாளால் அரியத் தொடங்கினார். மன்னன் திகைப்படைந்து அவர் தம் செயலைத் தடுத்தான். இருவரது சிவபக்தியையும் உலகுக்கு உணர்த்திய பசுபதிநாதன், தன்னருளால் யானை, பாகர், பணியாளர்களையும் உயிர்பித்ததோடு மட்டுமல்லாமல், சிவகாமியாண்டாரது பூக்குடலையையும் திரும்பச் செய்தார்.

திறை செலுத்த மறுத்த குரும்பொறையூர் அதியன்மீது புகழ்ச்சோழர் போர் தொடுக்க, போரில் கொல்லப்பட்டவர்களில் சடை முடியோடு கூடிய ஒருதலையினை கண்டார்.

என்ன பாவம் செய்தேனோ? சிவனடியாரைக் கொன்ற பாவம் அடைந்து விட்டேனே? என மனம் பதைத்து தனது செயலுக்குப் பரிகாரம் தேட ஆனிலையப்பர் கோவிலுள் தீக்குண்டம் ஏற்படுத்தி தீப்புகுந்தான். தேவர்கள் பூமாரி பொழிந்து சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்றனர். என்ற செய்தியும் உள்ளது.

முசுகுந்தர்

உமாதேவியுடன் சிவபெருமான் ஒருநாள் கயிலை மலைச் சாரலில் வில்வ மரத்தடியில் வீற்றிருந்தார், அப்போது மரத்தின் மீதிருந்த ஒரு குரங்கு விளையாட்டாய் வில்வதளத்தினை ஒவ்வொன்றாய் போட்டது.

உமாதேவி கோபடைந்தபோது, எம்பெருமான் உமையவளை சாந்தப் படுத்தி அது நம்மை அர்ச்சிக்கிறது. எனக்கூறி அதற்கு நல்லுணர்வு உண்டா குமாறு செய்தார்.

குரங்கு கீழறிங்கி வந்து சிவபெருமானை வணங்கி மன்னித்தருள வேண்டிட, சிவபெருமான் முசுவே என்னை அர்ச்சனை செய்தமையால் யாம் ஏற்றுக் கொண்டோம். இதன் பயனாக சோழர்

குலத்தில் சக்ரவர்த்தியாகத் தோன்றக் கடவாய் என வரமளித்தார்.

முசுவே நான் அப்போதும் இந்நிலை மறவாதிருக்க முகம் மட்டும், குரங்கு முகமாகவே இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

சிவனும் அவ்வாறே அருள் செய்திட முசுகுந்தன் கருவூரில் பிறந்து முடிசூடி ஆனிலை அண்ணலை அர்ச்சித்து பேறுபெற்றார்.

கோபிதாரத்தவஜன்

அகத்தியரை அவமதித்தால் சாபம் பெற்ற உஜ்ஜயினி மன்னன் கோபிதாரத்தவஜன் தன் தவறுக்கு பரிகாரம் காண அகத்தியரை வேண்டினான். அகத்தியரின் அறிவுரையின்படி கருவூரில் அமைந்துள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, பசுபதிநாதரை வணங்கி சாபம் நீங்கப்பெற்று வாழ்ந்தான்.

விபண்டகன்

விபண்டகன் என்ற வேடன் கொலை, களவு, நம்பிக்கை, துரோகம் இவற்றை தொடர்ந்து செய்த வந்தான். ஒரு சமயம் இவன் ஆனிலை ஆலயத்தில் திருடும் நோக்கத்தில் அந்தணர் வேடம் பூண்டு சென்றான். அங்கே கூட்ட நெரிசலில் சிக்கி, மாண்டு போனான். பாவியாக இருந்தாலும், ஆனிலை ஆலயத்தில் இறந்ததால் கயிலை செல்லும் பேறு கிடைத்தது. தன் தவறை உணர்ந்து வருந்திய அவனை மன்னித்த இறைவன், சிவகணங்களின் தலைவனாக்கினான்.

அருள்மிகு சௌந்தரநாயகி அம்பாள்

கருவூர்ச் சித்தர்

பதினெண் சித்தர்களில் ஒருவரான சித்தர் கருவூரார் இத்தலத்துள் தென்மேற்கு மூலையில் கோவில் கொண்டுள்ளார். மேலும், இவரது உருவச் சிலை நவநீதகிரி என்னும் வெண்ணெய் மலையில் உள்ளது.

இவர் ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா பாடியுள்ளார். இராஜராஜனது காலத்தில் இவர் இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. இவர் போகரது மாணக்கர் ஆவார்.

சித்த மருத்துவத்தைப் பற்றியும், இவர் பல பாடல்கள் பாடியுள்ளார். மழை வராத காலத்தே இவரது வாக்கால் மழை பொழிந்து வெள்ளம் வந்தது. சிவபெருமான் கோவில் கதவு திறக்காதபோது கவிபாடித் திறப்பித்துள்ளார்.

இராஜராஜன் தஞ்சையில் எடுத்த பெரிய கோவிலின் லிங்கம் மருந்து இளகியதால் கருவூரார் தனது தாம்பூலத்தால் லிங்கத்தை ஸ்தாபனம் செய்தார். இவரது பெருமைகள் அளவிடற்கரியன.

இத்தகு பெருமைகள் பல கொண்டுள்ள ஆனிலையப்பர் எனும் அருள்மிகு கல்யாண பசுபதீஸ்வரரும், அலங்கார வல்லியம்மனும் சௌந்தர நாயகி அம்மனும் வீற்றிருந்து அருள் பாலிக்கும்

கருவூர் திருத்தலத்திற்கு செல்வோம். இறைவன் அருளினை பெறுவோம்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13
ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86
தொலைபேசி: 23450920/28117575

சென்னை. அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் 15.6.2009 அன்று நடைபெற்ற விழாவில் திருக்கோயில்கள் திருப்பணிக்கு ரூ.5 லட்சம் நன்கொடை வழங்கிய திருக்கோயில் புரவலர்களுக்கு **'திருக்கோயில் புரவலர்'** விருதும் **'தங்க நிற அட்டையும்'** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில் திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக அடிகளார் அவர்கள். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் இ.ஆ.ப அவர்கள். இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த.பிச்சாண்டி இ.ஆ.ப.. அவர்கள். சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வி. சேகர் அவர்கள். அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஆன்றோர்களும். சான்றோர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

ஓம்
ஸ்ரீ பவானி அம்மன் துணை

அருள்மிகு ஓம் ஸ்ரீ பவானி அம்மன் திருக்கோயில்

பெரியபாளையம்

திருவள்ளூர் மாவட்டம் 601 102

வலைதளம் : www.omsribhavaniammantempleperiyapalayam.org
மின்னஞ்சல் : admin@omsribhavaniammantempleperiyapalayam.org

SRI BHAVANI AMMAN TEMPLE

பசலி-1419 மாபெரும் ஆடிப்பெரு விழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

ஸ்ரீ அகண்ட பரிபூரண ஆனந்த ஜோதியாய், சகல லோகங்களுக்கும் அன்னையாய் எங்கும் நிறைந்த இறைவனின் இடப்பாகம் கொண்டவளாய் வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கும் வண்டார் குழலியாய், ஏழு அவதாரங்களில் ஒன்றாகிய சங்கு, சக்கர ரூபியாய், காந்தஸ்வ ரூபியாகிய பவானி என்னும் திருநாமம் கொண்டு ஆரணி ஆற்றங்கரையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஓம் ஸ்ரீ பவானி அம்மனுக்கு ஆண்டுதோறும் நடைபெறும் ஆடிப்பெருவிழா நிகழும் விரோதி வருடம் ஆடி 3ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (19.07.2009) முதல் வாரம் தொடங்கி தொடர்ந்து பதினான்கு வாரங்களுக்கு ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.30 மணிக்கு மூலவர் சுயம்பு அம்மனுக்கு மகா அபிஷேகம் விசேஷ அலங்காரம் ஜோதிதரிசனம் நடைபெறும். உற்சவர் ஓம் ஸ்ரீ பவானி அம்மன் விசேஷ அலங்காரத்தில் கேடைய உள் பிரகார புறப்பாடு நடைப்பெறும். பின்வரும் விவரப்படி மாலை 6.00 மணிக்கு உற்சவர் ஓம் ஸ்ரீ பவானி அம்மன் திருவீதி உலா மேள தாள வாத்தியங்களுடன் விமரிசையாக நடைபெறும். அன்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னை பவானியின் ஆடித்திருவிழாவில் பங்குக் கொண்டு அருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

தமிழ் தேதி	வாரம்	ஆங்கில தேதி	கிழமை	திருவீதி உலா விவரம்
ஆடி 3	1 ம் வாரம்	19.07.2009	ஞாயிறு	"சூர்ய பிரபையில்" உமா மகேஸ்வரி அலங்காரம்
ஆடி 10	2 ம் வாரம்	26.07.2009	ஞாயிறு	"குதிரை வாகனத்தில்"ராஜபார்ட் அலங்காரம்
ஆடி 17	3 ம் வாரம்	02.08.2009	ஞாயிறு	"நாக வாகனத்தில்" ஆனந்த சயன அலங்காரம்
ஆடி 24	4 ம் வாரம்	09.08.2009	ஞாயிறு	"சிம்ம வாகனத்தில்" மகிஷாசூரமர்த்தினி அலங்காரம்
ஆடி 31	5 ம் வாரம்	16.08.2009	ஞாயிறு	"அன்ன வாகனத்தில்"சரஸ்வதி அலங்காரம்
ஆவணி 7	6 ம் வாரம்	23.08.2009	ஞாயிறு	"சந்திர பிரபையில்" கெஜ லட்சுமி அலங்காரம்
ஆவணி 14	7 ம் வாரம்	30.08.2009	ஞாயிறு	"சூரிய பிரபையில்" திரிபுரசம்மாரம் அலங்காரம்
ஆவணி 21	8 ம் வாரம்	06.09.2009	ஞாயிறு	"குதிரை வாகனத்தில்"சூர்யா அலங்காரம்
ஆவணி 28	9 ம் வாரம்	13.09.2009	ஞாயிறு	"சூரிய பிரபையில்" பார்வதி அலங்காரம்
புரட்டாசி 4	10 ம் வாரம்	20.09.2009	ஞாயிறு	"சூரிய பிரபையில்" காமாட்சி அலங்காரம்
புரட்டாசி 11	11 ம் வாரம்	27.09.2009	ஞாயிறு	"அன்ன வாகனத்தில்" பத்மாசனி அலங்காரம்
புரட்டாசி 18	12 ம் வாரம்	04.10.2009	ஞாயிறு	"சூரிய பிரபையில்" அன்ன பூரனி அலங்காரம்
புரட்டாசி 25	13 ம் வாரம்	11.10.2009	ஞாயிறு	"சூரிய பிரபையில்" காயத்ரி அலங்காரம்
ஐப்பசி 1	14 ம் வாரம்	18.10.2009	ஞாயிறு	"அன்ன வாகனத்தில்" சம்பாநதி அலங்காரம்

இத்திருக்கோயிலில் உற்சவம் செய்யுவிரும்பும் அன்பர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் அனுமதி பெற்று உற்சவத்தை நடத்திக்கொள்ள வேண்டும்.

உற்சவத்தை முன்னிட்டு உபயதாரர்கள் அம்பாள் பெயராலும், கோயில் பெயராலும், பொதுமக்களிடமிருந்து எந்த விதமான நன்கொடையும் வசூலிக்கக்கூடாது என்று அறிவிக்கப்படுகிறது.

இத்திருக்கோயிலுக்கு மன்றமோ, குறிமேடையோ, சபாவோ, சங்கங்களோ, கமிட்டிகளோ எதுவும் கிடையாது. மேலும் தனிப்பட்ட நபர் எவரும், ஆலயத்தின் சார்பாக தொடர்பு கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

தனிப்பட்ட முறையில் தனி நபர்கள் எவரும் ஓம் ஸ்ரீ பவானி அம்மன் பெயரால் பணமாகவோ, பொருளாகவோ, நன்கொடை பெயரில் ஆலயத்தின் சார்பாக பெறுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஆலயத்திற்கு நன்கொடை காணிக்கை செலுத்துபவர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி உரிய ரசீது பெற்றுக்கொள்ளுமாறும், உண்டியல் காணிக்கைகளை ஆலயத்தின் உண்டியல்களில் மட்டுமே செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆலயத்தில் புகைப்படங்களோ, வீடியோ படங்களோ எடுப்பதற்கு அனுமதிக்கப் படவில்லை. செல்போன்கள் கொண்டு செல்லவும் அனுமதிக்கப்படவில்லை.

இங்ஙனம்,
திருமதி. பி.எஸ்.சேதுரத்தினம்
பரம்பரை மேலாளும் அறங்காவலர்.

தொலைபேசி எண்கள்
திருக்கோயில் அலுவலகம் 044-27991631 / சென்னை அலுவலகம் 044-2616160